Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

வெள்ளிக்கிழமை செப்டெம்பர் 03, 2021 | ஒளி: 07 கதிர்: 92 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு

## மாலை 6.0கேக்கு விளக்கேற்றுங்கள்

### ஐ.ம.ச அழைப்பு



கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து, இன்று (03) மாலை வீடுகளில் விளக்கேற்றுமாறு, ஐக்கிய மக்கள் சக்தி, மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## ரிஷாட் வீசியெறிந்த செல்போனுக்கு 'சீல்'



முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியூதீன் சிறைச்சாலையில் பயன்படுத்தியதாகக் கூறப்படும் திறன்பேசியை, சிறைச்சாலைகள் அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

விளக்கமறியல் கைதியான அவர், கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

ரிஷாட் பதியுதீனின் கையில், திறன்பேசி இருப்பதை சிறைக்காவலர்கள் நேற்று முன்தினம் (01) கண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## தனிமைப்படுத்தல் ஊரடங்கு

# நீடிக்குமா, நீடிக்காதா?

# இன்று அறிவிப்பு



நாட்டில் தற்போது அமலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை 06ஆம் திகதிக்குப் பின்னர் தளர்த்துவதா, அல்லது நீடிப்பதா? என்பது இன்று (03) தீர்மானிக்கப்பட உள்ளதாக இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையிலான கொரோனா வைரஸ் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தொடர்பில் தீர்மானிப்பதற்காக இன்று (03) கூட உள்ளது.

அந்தச் செயலணி, நாட்டின் கொரோனா வைரஸ் நிலைமைகள் தொடர்பில் நேற்று (02) ஆராய்ந்துள்ளன.

இன்று (03) நடைபெறும் ஜனாதிபதி செயலணியின் கூட்டத்தில் குழுவின் தீர்மானம் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட உள்ளது.

தொடர்ச்சி P2

## போர்வைக்குள் வந்தது 'மூடி மறைப்பு'



அத்தியாவசிய பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தும் போர்வையில் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டிருக்கும் அவசரகால சட்டம், அரசாங்கத்தின் தவறு மற்றும் இயலாமையை மூடி மறைப்பதற்காக கொண்டுவரப்பட்ட தன்னிச்சையான செயற்பாடாகும் எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அதனை வன்மையாகக் கண்டிப்பதாக அறிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (2) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## நல்ல கைதிகள் 24 பேர் விடுவிப்பு

நீண்ட காலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள், சிறைச்சாலைகளில் நடந்துகொண்ட முறைமையை அவதானித்து, அதில், நன்நடத்தையுடன் நடந்துகொண்ட 24 கைதிகளை விடுவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

9 சிறைச்சாலைகளில் இருந்தே, இந்தக் கைதிகள் எதிர்வரும் 17ஆம் திகதியன்று விடுதலை செய்யப்படவுள்ளனர் என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கைதிகளை சிறந்த பிரஜைகளாக்கி சமூகமயமாக்கும் திட்டத்தின் கீழ் புனர்வாழ்வளிக்கப்பட்ட 24 கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர்.

தொடர்ச்சி P2

### திருநெல்வேலியில்

## மரக்கறி வியாபாரிகள் தப்பியோட்டம்

■ என்.ராஜ்



தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைகளை மீறி, வீதியில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டோர், கோப்பாய் பொலிஸாரின் வருகையை கண்டு, விற்பனை செய்த மரக்கறிகளையும் கைவிட்டுத் தப்பியோடிய சம்பவம், திருநெல்வேலி - சிவன் அம்மன் வீதியில், நேற்று (02) காலை இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## ஒக்ஸி மீட்டர் 3,000 ரூபாய்




ஒக்ஸிமீட்டர் ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலையாக ரூ.3,000 நிர்ணயிக்கப்பட்டுள்ளது என மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்படவுள்ளது. எவ்விதமான பதிவுகளும் இன்றி, நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள 5,200 ஒக்ஸி

தொடர்ச்சி P2

## வளர்ப்பு நாய்களுக்கும் வரி அறவிட தீர்மானம்

### மார்ச் 31க்கு முன்னர் செலுத்தவேண்டும்



வீடுகளில் வளர்க்கும் வளர்ப்பு நாய்களுக்கான வரியை செலுத்தும் யோசனை தம்புள்ளை மாநகர சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம், ஆண் நாயாக இருந்தாலும் சரி, பெண் நாயாக இருந்தாலும் சரி, வளர்ப்பு நாய்களுக்கு மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் வரி செலுத்தவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஓகஸ்டில் 1,187 கொவிட் சடலங்கள் நல்லடக்கம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்



கொரோனா தொற்றால் மரணிப்பவர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி, மஜ்மா நகர் மையவாடியில் கடந்த ஓகஸ்ட் மாதம் 1,187 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், கடந்த வாரம் மாத்திரம் 306 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## உழுத பஸ் சாரதி மின்னல் தாக்கி பலி

■ எம்.றொசாந்த், எஸ். நிதர்ஷன், என். ராஜ்



அச்சுவேலி, நாவற்காட்டு பகுதியில், நேற்று (02) பிற்பகல், வயலில் உழுது கொண்டிருந்த உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மதனராசா (வயது 41) என்பவர், மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி வடக்கை பிறப்பிடமாக கொண்ட இவர், இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை பஸ் சாரதியாக பணியாற்றுபவர் என, விசாரணையில் தெரியவந்துள்ளது.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில், சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## உணவு கையிருப்பில் உள்ளது

### சில சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக மீண்டும் பிரகடனம்

மக்களின் தேவைகளை ஈடு செய்வதற்கான தேவையான உணவு கையிருப்பு அரசாங்கத்திடம் உள்ளதாக தெரிவித்துள்ள அரசாங்கம், சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக மீண்டும் பிரகடனம் செய்துள்ளது.

ஒரு சில வர்த்தகர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்து இலாபமீட்டும் நோக்கில் நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை மொத்தமாக பதுக்கி வைத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### கொரோனா மரணங்கள் இலங்கையில்

## 19 சதவீதத்தால் அதிகரிப்பு

தெற்காசிய வலயத்தில் கொரோனா மரணவீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்ட வாராந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட மூன்று நாடுகளில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை ஓகஸ்ட் மாதத்தின் இறுதிப் பகுதியில் 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## நிர்வாணமாக பாலியல் உறவுகொண்ட ஜோடி கைது

பலாங்கொடை, பஹந்துடாவா எல்ல நீர்வீழ்ச்சியில் நிர்வாணமாக பாலியல் செயற்பாடுகளை ஈடுபடும் போது, அவற்றை ஒளிப்பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டவர்களை பொலிஸார் தேடி வலைவிரித்திருந்தனர்.

இந்நிலையில், அவ்வாறு பாலியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு இருவரையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர், நேற்று (02) கைது செய்துள்ளனர்.

வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாச பயணிகள் குடும்பங்களுடன் சென்று நீராடும் அந்த நீர்வீழ்ச்சிக்கு கீழிருக்கும் நீர் நிலையில் வைத்தே,

தொடர்ச்சி P2




## ஊசி ஏற்ற வந்தோர் மீது குண்டாந்தடி தாக்குதல்

கொரோனா தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதற்காக வந்திருந்த பொதுமக்கள் மீது, அங்கு கடமையிலிருந்த பொலிஸார், குண்டாந்தடி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதனால், அவ்விடத்திலிருந்து அகன்று சென்ற பொதுமக்கள் "ஹூ" சத்தமிட்டு, பொலிஸாரை கேலி கிண்டல் செய்த வண்ணம் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

தொடர்ச்சி P2



## சாணக்கியன் முதலிடம்

முழுச் செய்தி P3

PAGE 1 தொடர்ச்சிகள்

## ரிஷாட் வீசியெறிந்த செல்போனுக்கு 'சீல்'

அதனூடாக அவர் பேசிக்கொண்டிருந்ததையும் அவதானித்துள்ளனர் என சிறைச்சாலைகள் ஆணையாளரான ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அந்த கையடக்க தொலைபேசியை அவரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக, சிறை அதிகாரிகள், பதியுதீனை நெருங்கியுள்ளனர். சிறைச்சாலை அதிகாரிகளை கண்ட அவர், அதனை அந்த சிறைக்கூண்டில் இருக்கும் சிறிய ஜன்னலின் ஊடாக வெளியே எறிந்துவிட்டார் எனத் தெரிவித்த அதிகாரிகள், அந்த கையடக்க தொலைபேசி மீட்கப்பட்டு, சீல் வைக்கப்பட்டுள்ளது என்றனர்.

இந்தக் கையடக்க தொலைபேசி, மேலதிக நடவடிக்கைகளுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## போர்வைக்குள் வந்தது 'மூடி மறைப்பு'

தொடர்ந்து தெரிவித்த அவர்,

2003ஆம் ஆண்டு 9ஆம் இலக்க நுகர்வோர் சட்டத்தின் ஊடாக பல செயற்பாடுகளை செய்ய முடியும் என்றாலும் அவசர அவசரமாக அரசாங்கம் அவசரகால சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம், இன்னும் ஆபத்தான செயற்பாடு ஒன்றுக்கு அரசாங்கம் இழுத்துச் செல்வதாகவே அமைகிறது என்றார்.

நாட்டை சர்வாதிகார ஆட்சிக்கு மாற்றி, மனித உரிமைகளுக்கு கூட சவால் விடுவதே இதன்மூலம் அரசாங்கத்தின் நோக்கமாக அமைகிறது என்றார்.

அரசாங்கம் அவசரகால சட்டத்தைக் கொண்டு வந்த உடனேயே, இலங்கையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்து விடாது என தெரிவித்த அவர், கொரோனா ஒழிப்புக்காக அவசரகால சட்டத்தின் உதவியும் கிடைக்காது என்றார்.

நாட்டின் அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தவோ அல்லது வெளிநாட்டு இருப்பை போதியளவு வைத்திருக்கவோ முடியாத நிலையில், மக்களை துன்பத்தில் ஆழ்த்துவதற்கே அவசரகாலச் சட்டம் அரசாங்கத்தால் தேவைப்படுகின்றது என்றார்.

ஜனநாயகத்தை தலைகீழாகப் புரட்டி, சர்வாதிகாரத்துக்கு வித்திடும் இந்த அவசரகால சட்டம் தொடர்பான வர்த்தமானியை உடனடியாக மீளப் பெறவேண்டுமென, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்த அவர், நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்க நுகர்வோர் சட்டத்தை செயற்படுத்தவேண்டும். அத்தியாவசியப் பொருள்களை பதுக்குபவர்களுக்கு எதிராக அதனூடாக சட்டநடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

## நல்ல கைதிகள் 24 பேர் விடுவிப்பு

சிறைச்சாலைகள் முகாமைத்துவ மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேவின் அனுமதியின் கீழ், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 19 சதவீதத்தால் அதிகரிப்பு

கொரோனா மரணங்கள் இலங்கையில் 19 சதவீதத்தாலும் இந்தியாவில் 17 சதவீதத்தாலும் திமோர்-லெசுடேயில் 32 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன என குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் மாத்திரம் தெற்காசிய பிராந்தியத்தில் 14,000 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. ஒப்பீட்டளவில் இது 20 சதவீத வீழ்ச்சி எனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# நீடிக்குமா, நீடிக்காதா? இன்று அறிவிப்பு

கடந்த முறைகூடி இருந்த ஜனாதிபதி செயலணி, 06ஆம் திகதி வரையில் நாட்டை முடக்குவதற்கு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சுகாதார நிபுணர்கள் பலரும், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே ஆகியோரும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்க வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

பல்வேறான அழுத்தங்களுக்குப் பின்னர், ஒகஸ்ட் மாதம் 20ஆம் திகதியன்று 10 நாள்களுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அதன்பின்னர் செப்டெம்பர் 6ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மரக்கறி வியாபாரிகள் தப்பியோட்டம்

அவ்விடத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதனால் அங்கு மக்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்ட நிலையில், கோப்பாய் பொலிஸாரால் ஏற்கெனவே அவ்விடத்தில் மரக்கறி வியாபாரம் செய்ய தடை விதிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், அவ்விடத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டோரை விரட்டிய போதிலும், தொடர்ச்சியாக அவ்விடத்தில் வியாபாரம் மேற்கொள்ளப்பட்டதுடன், பொதுமக்களும் அதிகளவில் ஒன்றுகூடுவர்.

இதையடுத்து, நேற்று காலை, கோப்பாய் பொலிஸார், அவ்விடத்துக்கு வருகைதந்தபோது, வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டோர், தமது வியாபார பொருள்களையும் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

எனினும், பொலிஸார் திரும்பிச் சென்ற பின்னர், தமது மரக்கறி பொருள்களை வியாபாரிகள் எடுத்துச் சென்றனர்.

## ஊசி செலுத்த வந்தோர் மீது குண்டாந்தடி தாக்குதல்

இந்தச் சம்பவம், மாத்தறை வெலிகம கல்பொக்க பிரதேசத்தில் நேற்று முன்தினம் (01) தடுப்பூசி செலுத்தும் மத்திய நிலையத்திலேயே இடம்பெற்றுள்ளது.

அவ்வாறு வந்த பொதுமக்கள் மீது, பொலிஸ் உயர் அதிகாரியொருவர் குண்டாந்தடியால் தாக்குதல் நடத்தும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

போதுமானளவு தடுப்பூசிகள் அந்த மையத்தில் இல்லாமையினால், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இடைநடுவிலேயே நிறுத்தப்பட்டது. அது தொடர்பில் பொதுச் சுகாதார அதிகரிகள், வரிசையில் நின்றவர்களுக்கு அறிவித்துள்ளனர்.

எனினும், அம்மக்கள் அங்கிருந்து செல்லாது, வரிசையிலேயே நீண்டநேரம் காத்திருந்துள்ளனர். இது தொடர்பில், வெலிகம பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அதனையடுத்தே, அங்கு விரைந்த பொலிஸார், குண்டாந்தடி பிரயோகத்தை மேற்கொண்டு மக்களை அங்கிருந்து விரட்டினர்.

## நிர்வாணமாக பாலியல் உறவுகொண்ட ஜோடி கைது

நிர்வாணமாக பாலியலில் ஈடுபடும் காட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு ஒளிப்பதிவு செய்யப்பட்ட காட்சிகள் சமூக வலைத்தளங்களில் தரவேற்றப்பட்டிருந்தன.

## ஒகஸ்டில் 1,187 கொவிட் சடலங்கள்...

இம்மாதம் 1ஆம் திகதி வரை 2,453 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம். நௌபர் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா மரண வீதம் அதிகரித்து காணப்படுவதால், மஜ்மா நகர் மையவாடிக்கு தற்போது நாளொன்றுக்கு 40க்கு மேற்பட்ட சடலங்கள் அடக்கத்துக்கு வருவதாகவும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, ஒகஸ்ட் மாதம் 23ஆம் திகதி மாத்திரம் 57 உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதுவே நாளொன்றில் அதிகூடிய சடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட நாளாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாலை 6.06க்கு விளக்கேற்றுங்கள்

ஐக்கிய மக்கள் சக்தியின் இணை ஊடகப்பேச்சாளர், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா தொற்றுப்பரவல் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென பிரார்த்தித்து, இன்று மாலை 6.06க்கு வீடுகளில் விளக்கேற்றுமாறு, அந்த அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலைகளிலும் வீடுகளிலும் சிகிச்சை பெற்று வருவோர் விரைவில் குணமடைய வேண்டும் எனவும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து சுகாதார ஊழியர்கள், பொலிஸார் மற்றும் முப்படையினர் உள்ளிட்ட அனைவரின் நலனுக்காகவும் பிரார்த்திக்க வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒக்ஸி மீட்டர் 3,000 ரூபாய்

மீட்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அனுமதியளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் அவர்கள் வர்த்தக குறியீடு, தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யுமாறு, அமைச்சர் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றை அடுத்து, ஆகக் கூடுதலான கேள்வியைக் கொண்டிருக்கும் ஒக்ஸி மீட்டர்கள், இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் போது, ஆகக்கூடுதலான கவனத்தை செலுத்துமாறும் அதன் தரத்தை தேடியறியுமாறும், அனுமதி பெற்றுக்கொள்ளாமல் இவ்வாறான இயந்திரங்கள் இறக்கமதி செய்யப்படுமாயின், உடனடியாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பணித்துள்ளார் என சுகாதார அமைச்சின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வளர்ப்பு நாய்களுக்கும் வரி அறவிட தீர்மானம்

தம்புள்ளை மாநகர சபை எல்லைக்குள் காணப்படுகின்ற 13 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள வீடுகளில் வளர்க்கும் வளர்ப்பு நாய்களுக்கு, வரி செலுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை மாநகர சபையின் மாதாந்த கூட்டத்தில் இதற்கான யோசனை முன்வைக்கப்படவுள்ளது. தம்புள்ளை மாநகர சபையின் தவிசாளர் ஜாலிய ஓபாத்தவினால், இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

வளர்ப்பு நாய்களுக்கு வரி கட்டப்படும் போது முத்திரிகை கட்டணங்கள் மற்றும் வற் வரி ஆகியனவும் சேர்த்துக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உணவு கையிருப்பில் உள்ளது

மக்களுக்கு எதிரான இந்த முயற்சியை முறியடிப்பதற்காக பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோகம் தொடர்பிலான சரத்துகளை கடந்த திங்கட்கிழமை (31) முதல் அமுல்படுத்தியதாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

பதுக்கி வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களைக் கைப்பற்றி, நியாயமான விலையில் விநியோகிப்பதற்காக சதொச உள்ளிட்ட அரச நிறுவனங்களிடம் கையளித்தன் மூலம் செயற்கையாக உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியை முறியடிக்க முடிந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய பொதுமக்கள் சேவைகள் சட்டத்தின் கீழ் சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக ஜனாதிபதி பிரகடனம் செய்துள்ளார்.

துறைமுகங்கள் அதிகார சபை நிறைவேற்ற வேண்டிய அனைத்து சேவைகள், பெற்றோலிய உற்பத்தி, திரவ வாயு உள்ளிட்ட அனைத்து எரிபொருள் விநியோகம், ரயில்வே திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையால் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து பொதுப் போக்குவரத்துச் சேவைகள், பொதுச் சேவைகளை நடத்திச் செல்வதற்கு தேவையான பராமரிப்பு மற்றும் நடவடிக்கை பிரிவுகள் ஆகியன அத்தியவாசிய சேவைகளாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட களப்பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் சேவைகளும் அத்தியாவசிய சேவைகளுக்குள் அடங்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட அனைத்து அரச வங்கிகள், காப்புறுதி சேவைகள், சுகாதார சேவையுடன் தொடர்புடைய அனைத்து சேவைகள், சதொச மற்றும் கூட்டுறவு துறைகளுடன் தொடர்புடைய சேவைகளையும் ஜனாதிபதி அத்தியாவசிய சேவைகளாக வர்த்தமானியில் அறிவித்துள்ளார்.

இவற்றைத் தவிர, மாகாண சபைகளின் கீழ் இயங்கும் அரச அலுவலகங்களால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகள் மற்றும் தபால் சேவையும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

# சு.க பலவீனம் அடைந்துள்ளது

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு தற்போது ஏற்பட்டிருக்கும் தலையெழுத்தை எண்ணி மிகுந்த வேதனை அடைவதாகத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, இக்கட்சி தற்போது மிகவும் பலவீனமடைந்துள்ளது என்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவு தொடர்பில் தனது பேஸ்புக்கிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்துள்ள அவர்,

தான் வளர்ந்து, வாழ்ந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியை தற்போதைய கட்சித் தலைவர்கள் சிதைத்துள்ளதை மிகவும் வேதனையுடன் நோக்குவதாகத் தெரிவித்துள்ள அவர்,உண்மையான பண்டாரநாயக்க கொள்கையுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியை அழிக்கும் சதியிலிருந்து மீட்டு, பலமிக்கதாக முன்னோக்கி கொண்டு செல்ல தலைமைத்துவத்தை ஏற்று, நாடு முழுவதும் இருக்கும் உண்மையான கட்சியின் ஆதரவாளர்கள் சகலருக்கும் அழைப்பு



விடுக்கிறேன். இலங்கையில் அதிக காலம் ஆட்சியிலிருந்தது மாத்திரமின்றி சிறந்த நல்ல விடயங்களை நாட்டுக்காக எமது கட்சி செய்தது. ஆனால், தற்போது கட்சிக்கு ஏற்பட்டுள்ள தலையெழுத்து குறித்து மிகுந்த மனவேதனை அடைகிறேன். நினைத்துப் பார்த்தால் கட்டிலிலிருந்து எழும்புவதற்கு கூட காலையில் மனம் வரவில்லை.

நான் செய்த செயல்களால் அல்ல; செய்யாத வேலைகளால் பொறுப்புக் கூற வேண்டியவளாக உள்ளேன். ஒன்பது வருடங்கள் நான் அரசியலிலிருந்து விலகி, வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது, 2007ஆம் ஆண்டிலிருந்து என்னை வா,வா என அழைத்த போதும் நான் முடியாது என மறுத்தேன். ஆனாலும் நாட்டுக்காகவும் கட்சியை கட்டியெழுப்புவதற்காகவும் பாரிய கனவுடன் 2015ஆம் ஆண்டு அரசியலுக்குள் நுழைந்ததாக தெரிவித்தார்.

உயிருடன் இருக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கு, தலைமைத்துவம் வழங்கக் கூடிய ஒரே பண்டாநாயக்கவை இல்லாது ஒழிக்கவும் கட்சியை அழிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன.ஆனால், இந்தக் கட்சியை முழுயமையாக அழிக்க எவராலும் முடியாது. பலம்மிக்க கொள்கையுடைய கட்சிரைய யாராலும் அழிக்க முடியாது.

மரமொன்று அடியோடு அழிக்கப்பட்டாலும் வேர் இருந்தால் துளிர்த்து வரும். அதேபோல் துளிர்த்து வர நாள்கள் செல்லலாம்; அது பலமடைய நாள்கள் செல்லும். ஆனால், அது நடக்கும்; அன்று நான் உயிருடன் இருப்பேனோ தெரியாது. ஆனால், துளிர்த்து வரும் மரத்துக்கு பலமளிக்க, தேவையான இளைஞர் சமூகத்துக்கு உரமாக இருப்பேன் என்றார்.

# நாடு திறக்கப்பட்டால், மக்கள் கூடுவதைத் தடுக்க வேண்டும்

எதிர்வரும் 06ஆம் திகதி நாடு திறக்கப்பட்டால், மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், எதிர்வரும் 6ஆம் திகதி நாட்டை திறப்பதாக இருந்தால், போக்குவரத்துச் சேவை, வர்த்தக மத்திய நிலையங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் ஒன்று கூடும் இடங்களில் பொதுமக்கள் ஒன்று கூடுவதைக் கட்டுப்படுத்துவதுத் தொடர்பில் இப்போதே திட்டமிடப்பட வேண்டும் எனவும் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதனுடன் தொடர்புப்பட்ட நிறுவனங்கள் அனைத்துக்கும் மக்கள் ஒன்று கூடுவதைத் தடுப்பதற்கான பொறுப்புகள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை அனைவரும் உரிய வகையில் நிறைவேற்ற வேண்டும் எனவும் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஒக்சிசன் தட்டுப்பாடு இல்லை. எதிர்காலத்தில் தேவைப்படும் அளவுக்கு ஏற்ப ஒக்சிசன் தயாரிக்கப்படுவதற்கும் அல்லது அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## நெல் களஞ்சியசாலைகள் இரண்டுக்கு சீல்

க. அகரன்

வவுனியா பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் வவுனியா - தாண்டிக்குளம் மற்றும் ஹொரவப்பொத்தானை வீதிகளில் அமைந்துள்ள இரண்டு தனியார் நெற்களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டது.

நாட்டிலுள்ள தனியார் நெற்களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல் தொடர்பான தகவல்களை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட கால எல்லைக்குள் வழங்குமாறு, அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த தகவல்களை வழங்காத குற்றச்சாட்டின் கீழ், இவ்விரண்டு நெற்களஞ்சிய சாலைகளும், வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் சீல் வைக்கப்பட்டன. இதேவேளை, குறித்த களஞ்சியசாலைகளில் உள்ள நெல்லை, நிர்ணய விலையை செலுத்தி, நெல் சந்தைப்படுத்தும் சபையால் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## Manthri.lk இன் தரப்படுத்தலில் சாணக்கியன் முதலாமிடம்




பாராளுமன்றத்தில் சிறப்பாக செயற்படும் உறுப்பினர்களுக்கான தரவரிசையினை ‘ Manthri.lk ‘ என்ற இணையத்தளம் வெளியிட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில், தற்போது புதிய தரப்படுத்தல் பட்டியலினை குறித்த இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

புதிய தரப்படுத்தலில்மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் முதல் இடத்தினை பிடித்துள்ளதுடன், அமைச்சர் சரத் வீரசேகர இரண்டாவது இடத்தினையும், புத்திக பத்திரன மூன்றாவது இடத்தினையும் பிடித்துள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் இரா சாணக்கியன் கூறியதாவது;

‘கடந்த ஜூலை மாதம் நடந்த 6 பாராளுமன்ற அமர்வுகளில் சிறப்பாக செயல்பட்டதற்கும் மற்றும் பங்களிப்பதுக்கமான பாராளுமன்ற உறுப்பினர்களில் என்னை முதலாவதாக தேர்ந்தெடுத்த Manthri.lk இணையத்தளத்துக்கு நன்றிகள். எனது மக்களுக்கான சேவையில் என்றும் பின்னிக்க மாட்டேன்; பாராளுமன்ற உறுப்பினரின் கடமைகளில் முக்கியமானதும் முன்மையானதும் மக்கள் பிரச்சினைகளை பாராளுமன்றத்துக்கு கொண்டு செல்லுதுதல் மற்றும் அதற்கான தீர்வுகளை பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அழுத்தங்களை பிரயோகித்தல். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனது கடமையை என்னை தேர்ந்தெடுத்த எனது மாவட்ட மக்களுக்காகவும் தமிழ் பேசும் இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்காகவும் சரியாக செய்கின்றேன் என பெருமிதம் கொள்கின்றேன்’ என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா சாணக்கியன் தெரிவித்தார்.

## ஞானசார தேரர் கடும் எச்சரிக்கை



மோசமான அடிப்படைவாத, மதவாதத்தால் கட்டியெழுப்பட்ட தலிபான் அமைப்பு, எந்த விதத்தில் எமது நாட்டில் அழுத்தத்தை ஏற்படுத்தும், அவர்களின் செயற்பாடுகள் எவ்வாறு எம்மில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்கின்றோம் எனத் தெரிவித்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், தலிபான் தீவிரவாதிகள் அல்லது ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் உருவாவதற்கான வாய்ப்புகள் இலங்கையில் அதிகம் என்றார்.

நேற்று (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கான அரசியல் காரணங்கள் உள்ளிட்டவை எமது நாட்டில் வாய்ப்பாக இருப்பதாக தெரிவித்த அவர், “கொரோனாவால் உயிரிழந்த 300க்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்யாமல் தகனம் செய்யப்பட்ட நிலையில், அவர்களின் வீடுகளில் உள்ளவர்களின் மனநிலை இப்போது எப்படி இருக்கும் என பார்க்க வேண்டும்” என்றார்.

“ஏனெனில், இது அவர்களின் மதம் சார்ந்த நிகழ்வு. இந்தத் தகன சம்பவத்தால் அவர்களுக்குள் வைராக்கியம் ஏற்பட்டிருக்கலாம்” என்றார்.

இஸ்லாமை பாதுகாப்பதற்காக அவர்களுக்கு பல்வேறு வேலைகள் பகிரப்பட்டுள்ளன. இன்று ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலைமையுடன், எரிக்கப்பட்ட ஜனாஸாக்களின் உறவினர்கள், குழந்தைகள் எவ்வாறான மனநிலையில் இருக்கிறார்கள் என்பதை புலனாய்வுப் பிரிவினர் ஆராய வேண்டும் என்றார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு பின்பு கத்தோலிக்க சபை ஆடத் தொடங்கியுள்ளதால், சட்டமா அதிபர் பதவி, பொலிஸ்மா அதிபர் மற்றும் சி.ஐ.டி பிரதான பதவிகளை பேராயர் கர்தினாலிடம் வழங்குமாறு, அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றை முன்வைப்பதாகவும் அவ்வாறு வழங்குமிடத்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விடயங்களை அவர் கண்டுபிடிப்பார் என்றார்.

## தர்மலிங்கத்தின் நினைவு தினம்







எம்.றொசாந்த் என்.ராஜ்

தமிழர் விடுதலை கூட்டணியின் மானிப்பாய் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான வி.தர்மலிங்கத்தின் 36ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, அவரது நினைவிடத்தில், நேற்று (02) அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் மகனும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தனின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் - தாவடியில் உள்ள நினைவிடத்தில், குறித்த அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில், தமிழரசு கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, சுன்னாகம் பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வவுனியா தெற்குப் பிரிவில் கொரோனா கொத்தணி

க. அகரன்

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில், ஒரே கிராமத்தைச் சேர்ந்த 32 பேருக்கு, கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

குறித்த கிராமத்தைச் சேர்ந்த 3 பேர் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலைக்கு சென்றனர். இதன்போது, அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில், கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. ஆயினும், குறித்த நபர்கள் வைத்தியசாலையில் தங்காமல் தப்பிச் சென்றிருந்தனர். இதன் பின்னர், இது தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுத்த சுகாதார பிரிவினர், குறித்த கிராமத்தில் தேடுதல் நடத்தி ஏழு நபர்களை தனிமைப்படுத்தியிருந்தனர். எனினும், தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள், தனிமைப்படுத்தல் விதிமுறையை கடைப்பிடிக்காமல் வெளியில் சுற்றித் திரிந்துள்ளனர்.

இது தொடர்பாக சுகாதார பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டது. இதையடுத்து, குறித்த பகுதியை சேர்ந்த 150 பேரிடம் அன்டிஜன் பரிசோதனையை முன்னெடுத்தனர். அதில், 32 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். குறித்த பகுதியில், வசிக்கும் அநேக மக்கள் நாடோடிகள் இனம் என்பது குறிப்பிடத்தக்கது.

## சேதனப் பசளையை முழுமையாக மேற்கொள்ள நடவடிக்கை

### ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர்

இலங்கையின் விவசாயத்துறையானது, எதிர்வரும் தசாப்தங்களில் முற்று முழுதாகச் சேதனப் பசளையைப் பயன்படுத்தி மேற்கொள்வதற்கு வழிவகுக்கிறதென ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போது பேசிய ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கைப் பிரகடனத்தின் ஊடாகப் பொது மக்களுக்கு ஜனாதிபதி உறுதி மொழி வழங்கியுள்ளார்.

பெரும்பான்மையான மக்களின் இணக்கத்துக்குப் பாத்திரமாகியுள்ள அந்தக் கொள்கைப் பிரகடனத்தை, எதிர்காலச் சந்ததியினரின் நலனுக்காக நடைமுறைப்படுத்துவதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

இரசாயனப் பசளைப் பயன்பாடு காரணமாக, எமது நாடு மாபெரும் பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகின்றது. அதன்விளைவாக, மண்வளமற்றுப் போதல், நிலத்தடி நீருடன் நச்சு இரசாயனங்கள் கலத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இரசாயனப் பசளையில் உள்ளடங்குவதாகக் கண்டறியப்பட்டுள்ள ஆசனிக் மற்றும் கெட்மியம் போன்றன, சுகாதாரத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த இரசாயனப் பதார்த்தங்கள் காரணமாக, புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன என்று, உலக சுகாதார ஸ்தாபனமும் அறிவித்துள்ளது.

இதேவேளை, விவசாய நிலங்களினூடாகச் சுத்தமான நீருடன் கலக்கும் இரசாயனப் பதார்த்தங்கள் காரணமாகச் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாகும் நோயாளிகளின் எண்ணிக்கையும், நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. நாட்டின் தொழிலாளர் படையானது இவ்வாறான நோய்களுக்குப் பாத்திரமாவது, நாட்டின் எதிர்காலப் பொருளாதாரத்துக்கும் பெரும்பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

## ஜம்இய்யத்துல் உலமா அங்கத்தவர்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சி

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தனது அங்கத்தவர்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்த திட்டமிட்டுள்ளதாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித் தெரிவித்தார். இதன் அடிப்படையில் ஜம்இய்யாவின் அங்கத்துவத்தை பெற்ற ஆலிம்களின் விபரங்கள் புதுப்பிக்கப்பட்டு, அதற்கான ஒரு மென்பொருள் (Softare) தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எனவே, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் அங்கத்துவம் பெற்றுள்ள ஆலிம்கள் அனைவரும் இந்த https://docs.google.com/forms/d/e/1FAIpQLSeMD9ei3LIAB4gbWVHN_06u0UnB7cChDDJ_qkr6iBRahuVh6A/viewform இணைப்பினூடாக தங்களது விபரங்களை எதிர்வரும் 2021.09.10 ஆம் திகதிக்கு முன்னர் புதுப்பிக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

## தேசிய வேலைத்திட்டத்தை 06 இல் அறிவிக்கிறது ஐ.தே.க



வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீள கட்டியெழுப்புவதற்கான தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் 75ஆவது வருட ஆண்டு விழாவின்போது அறிவிக்கப்படுமென அக்கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பொருளாதாரப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட பிரதான காரணங்கள் அடிப்படையாகக் கொண்டு நாட்டிலுள்ள அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய தேசிய வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி என்பது நாட்டிலுள்ள பல அரசியற் கட்சியின் தாய் கட்சி எனவும், எதிர்வரும் 6ஆம் திகதி, ஐ.தே.கவின் 75ஆவது ஆண்டுவிழா கொண்டாடப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசிய கட்சியால் அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட 21 யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதோடு, அதில் சில யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அரசாங்கம் முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்

## பொருளாதாரப் பிரச்சினைக்கு அவசரகாலச்சட்டமும் இராணுவமும் தீர்வல்ல



அவசரகால நிலைமையைப் பிறப்பித்து, இராணுவ அதிகாரிகளை பணிகளுக்கு அமர்த்தி, நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை சரி செய்ய முடியாதென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் தொடர்பில் எதுவும் தெரியாத நபர்களால் எடுக்கப்படும் தீர்மானங்களால் நாட்டை கட்டியெழுப்ப முடியாத அளவுக்கு நாடு வீழ்ச்சியடையும் எனவும், பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று சந்தைகளை இலக்கு வைத்து பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சிலர் கொரோனா வைரஸ் பரவல் காலத்தில் பாரியளவில் வருமானத்தை ஈட்டிக்கொள்வதாகவும், இவ்வாறானவர்களால் ஒட்டுமொத்த மக்களும் வாழ முடியாத நிலைக்கு தள்ளப்படுகிறார் என்றார்.

மரத்திலிருந்து இலைகளை பிடுங்குவதுபோல அரசாங்கம் பணத்தை அச்சிட்டதால் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளது. பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதில் உள்ள பிரச்சினைகளாலேயே இந்த நிலைமை நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

> “ பொருளாதாரம் தொடர்பில் எதுவும் தெரியாத நபர்களால் எடுக்கப்படும் தீர்மானங்களால், பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதில் உள்ள பிரச்சினைகளாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது

வல்வெட்டித்துறை நகர சபை

# தவிசாளர் தெரிவு ஒத்திவைப்பு

■ எஸ். நிதர்ஷன், என்.ராஜ்

வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் தெரிவு, கோரம் இல்லாததால், திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் தெரிவு அமர்வு, நேற்று முற்பகல் 10 மணிக்கு நகர சபைக்குரிய மண்டபத்தில், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

நேற்றைய அமர்வு கடுமையான சுகாதார நடைமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டது.

இதன்போது, சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் மூவரும் ஈபிடிபி உறுப்பினர்கள் இருவரும் என ஐவர் மட்டுமே அமர்வில் பங்கேற்றனர்.

அதனால் அமர்வு சுமார் 30 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர், அமர்வு ஆரம்பிக்கப்பட்டதும் கோரம் போதாமையால் திகதி குறிப்பிடப்படாமல், தவிசாளர் தெரிவு அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

# முஸ்லிம்களை சீண்டுவது வழமையாகிவிட்டது

■ ஹஸ்பர் ஏ ஹலீம்



நாட்டில் சுமூகமான நிலைமைகள் ஏற்படுகின்ற போது, முஸ்லிம்களை சீண்டுவது வழமையாகிவிட்டதென, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளரும் கிண்ணியா நகர சபை உறுப்பினருமான எம்.எம். மஹதி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (02) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "சுமூகமானதொரு நிலைமை ஏற்பட்டு, நாடு வழமைக்கு திரும்புகின்ற போது, அடிப்படைவாதம், இனவாதம் மற்றும் மதவாதம் போன்ற சொற்பதங்களால் முஸ்லிம்கள் மீது அவதூறுகள் உண்டாக்கப்படுகின்றன.

"அதன் பெயரால் முஸ்லிம்களின் பொருளாதாரம், சொத்துகள், உயிர்கள் அழிக்கப்படுவது அவ்வப்போது அரங்கேற்றப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

"அந்த வகையில், ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தை தொடர்ந்து இலங்கையிலும் அடிப்படைவாதம், மதவாதம் வளர்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்றும், தப்லீக் ஜமாஅத்தை தடை செய்ய வேண்டும் என்றும் பொதுபல சேனா அமைப்பின் செயலாளரால் கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருப்பது முஸ்லிம் சமூகத்துக்கு மாபெரும் அச்சத்தை ஏற்படுத்துகின்றன.

"கொரோனா அனர்த்தம் காரணமாக பொருளாதாரமும் மக்களும் பாதிக்கப்பட்டு, நாடு அவதிப்படுகின்ற இத்தருணத்தில் இவ்வாறான கருத்துகள் அவரால் வெளியிடப்பட்டிருப்பது பெரும் கவலையை ஏற்படுத்துகின்றது.

"எனவே, இது குறித்து பொலிஸாரும் புலனாய்வுத் துறையினரும் கூடுதல் அவதானம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொற்றாளர்கள் அதிகரிப்பு; வவுனியா வைத்தியசாலையில்

# மூன்றாவது விடுதியும் திறப்பு

■ க. அகரன்



வவுனியா வைத்தியசாலையில் கொரோனா தொற்றாளர்களாக அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதால், மூன்றாவது விடுதியும் திறக்கப்பட்டுள்ளதாக, வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி க.ராகுலன் தெரிவித்தார்.

அத்துடன், தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளபோதும், மக்கள் தமது நடமாட்டங்களை குறைத்துக் கொள்வதுடன், சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றாவிடின் நிலைமை கைமீறிப்போகும் நிலை ஏற்படலாம் எனவும், அவர் எச்சரித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வவுனியா வைத்தியசாலையில் அறிகுறிகளுடன் கூடிய கொரோனா தொற்றாளர்களைப் பராமரிப்பதற்காக 100 படுக்கைகளைக் கொண்ட 3 விடுதிகளும், 15 படுக்கைகளைக் கொண்ட கர்ப்பிணி தாய்மாருக்கான விசேட விடுதியும், 6 படுக்கைகளைக் கொண்ட அதிதீவிர சிகிச்சை பிரிவும், 2 படுக்கைகளைக் கொண்ட சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்த சுத்திகரிப்பு பிரிவுமாக 120க்கும் அதிகமான படுக்கைகளைக் கொண்ட நோயாளர் பராமரிப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

இந்த வசதி, தமது வைத்தியசாலையின் ஆளணி மற்றும் ஏனைய காரணிகள், வளங்களைப் பொருத்த வரையில் மிக அதிகளவாகும் எனவும், அவர் கூறினார்.

வவுனியா மாவட்டத்தில், ஒகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 50 வரையான கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவித்த அவர், வைத்தியசாலையில் கட்டில்களை அதிகரிப்பதிலோ உயிர்சுவாச கருவிகளை தருவிப்பதிலோ மாத்திரம் மாவட்டத்தின் தொற்று நிலையை கட்டுப்படுத்திவிடாது எனவும் கூறினார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சந்தேகநபர்களின்

# விளக்கமறியல் 16 வரை நீடிப்பு

■ கனகராசா சரவணன்



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி, சியோன் தேவலாய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட 64 பேரையும், எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் உத்தரவிட்டார்.

தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக, சந்தேகநபர்களை நீதிமன்றுக்கு அழைத்துவர முடியாததையடுத்து, இது தொடர்பான வழக்கு, காணொளி மூலமாக நேற்று (02) நடைபெற்றது.

21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரேலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்றும் சந்தேகத்தின் பேரில், காத்தான்குடியை சேர்ந்த 65 பேரை கைது செய்தனர்.

அதேவேளை, சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்தனர். இரு வெவ்வேறு வழக்குகளை கொண்ட 69 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டனர்.

இவர்களில் 5 பேர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில், 64 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், குறித்த இரு வெவ்வேறு வழக்கு இலக்கங்களை கொண்ட 64 பேரும் பொலநறுவை, அநுராதபுரம், கேகாலை மற்றும் திருகோணமலை சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு, தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மின் தகன நிலையம் நிர்மாணம்:

# 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் மாவட்டத்தில், மின் தகன நிலையம் அமைப்பதற்காக, மன்னார் நகர சபையால் 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, மன்னார் நகர சபை தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்டனி டேவிட்சன், நேற்று (02) தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், மன்னார் மாவட்டத்தில், கொரோனா தொற்று காரணமாக உயிரிழப்பவர்களின் சடலங்கள், பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு, தகனம் செய்யப்பட்டு வந்த நிலையில், மன்னார் மாவட்டத்தில் மின் தகன நிலையமொன்றை உடனடியாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

இதற்கமைவாக, நேற்று முன்தினம் (01), மன்னார் நகர சபையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில், மன்னாரில் மின் தகன நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு, 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதென்று, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது எனவும், அவர் கூறினார்.

மேலும், பொது அஞ்சலி மண்டபம், சடலம் எரியூட்டும் இடத்துக்கு அருகாமையில் கிரியைகளை செய்வதற்கு தேவையான மண்டபம் மற்றும் மலசல கூடங்கள் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், குறித்த வேலைத்திட்டங்கள் இன்னும் சில நாள்களில் ஆரம்பிக்கப்படும் எனவும் கூறினார்.

மன்னார் மாவட்டத்தில், மின் தகன நிலையம் அமைக்க 30 மில்லியன் ரூபாய் நிதி தேவை என்று தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் நகர சபை 50 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சடலங்களை எரிப்பதற்கான வசதியை

# முல்லைத்தீவில் உருவாக்கவும்

■ நடராசா கிருஸ்ணகுமார்



முல்லைத்தீவில் சடலங்களை எரியூட்டுவதற்கு மின் தகன வசதியை ஏற்படுத்துங்கள் என, கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் த. அமலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வடமாகாணத்தில், யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் தான் மின்சாரம் மூலம் சடலங்களை எரியூட்டுவதற்கான வசதிகள் உள்ளன என்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னாரில் மின்சாரம் மூலம் சடலங்களை எரிப்பதற்கான வசதிகள் இல்லை என்றும் கூறினார்.

'தற்போது கொரோனா காரணமாக, இறப்புகள் நிகழ்கின்ற போது முல்லைத்தீவில் இருந்து வவுனியாவுக்கு தான் சடலங்கள் கொண்டு செல்லப்படுகின்றன. இதன் காரணமாக பொருளாதார ரீதியான நெருக்கடிகள் இறப்புகளை எதிர்கொள்கின்ற குடும்பங்களுக்கு ஏற்படுகின்றன.

'எனவே, முல்லைத்தீவில் மின்சாரம் மூலம் உடல்களை எரிப்பதற்கான வசதிகள் உருவாக்கப்படுமானால், பெருமளவு சிரமங்கள், அலைச்சல்கள் மக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் ஏற்படாது' எனவும், அமலன் தெரிவித்தார்.

கல்முனையில்

# இரண்டாவது தடுப்பூசியை செலுத்தாதவர்களுக்கு அறிவிப்பு

## திங்கள் தயாராகுங்கள்!

■ எம்.எஸ்.எம். ஹனீபா



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கொவிட்19 இரண்டாவது தடுப்பூசி வழங்கப்படாதவர்களுக்கு, எதிர்வரும் திங்கட்கிழமை (06) முதல் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஜீ. சுகுணன், நேற்று (02) தெரிவித்தார்.

கிடைக்கப்பெறவுள்ள மேலும் ஒரு தொகுதி சினோர்ஃபாம் கொவிட்-19 இரண்டாவது தடுப்பூசி கிரமமான முறையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள 13 சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளிலும், 07 ஆதார வைத்தியாசாலைகளிலும், 13 பிரதேச வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள கொவிட்-19 தடுப்பூசி ஏற்றும் விசேட மையங்களிலும் இரண்டாவது சினோர்ஃபாம் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

முதலாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டு, இரண்டாவது தடுப்பூசி இதுவரை பெறாதவர்கள், தத்தமது சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்குச் சென்று தங்களுக்கான இரண்டாவது தடுப்பூசியை பெற்றுமாறு கேட்டுள்ளார்.



பொறுப்பற்ற நடவடிக்கைகளால்

# திருகோணமலை ஆபத்தை எதிர்நோக்கும்

## மாவட்டச் செயலாளர் எச்சரிக்கை

■ அ.அச்சுதன்

பொதுமக்கள் அநாவசியமாக நடமாடுவதை தவிர்த்தல் இன்றியமையாது எனத் தெரிவித்த திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பாண்டிகோராள, "மக்களில் பொறுப்பற்ற நடவடிக்கைகள் ஆபத்தை நோக்கிப் பயணிக்க ஏதுவாக அமையும்" என்றார்.

எனவே, தற்போதைய அபாயகர நிலையை கருத்திற்கொண்டு ஒவ்வொருவரும் செயற்படுமாறும் அவர் வேண்டிக்கொண்டார்.

திருகோணமலை மாவட்ட கொவிட் செயலணிக் கூட்டம், மாவட்டச் செயலகத்தில், பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமாகிய கபில நுவன் அத்துக்கோராள தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மேலும் கருத்துரைத்த மாவட்டச் செயலாளர், "மாவட்டத்தில் உள்ள கிராமியக் குழுக்களை மேலும் வலுப்படுத்தி, வைரஸ் பரவாமல் இருக்க ஆவண செய்ய வேண்டும். இக்குழுவை வலுப்படுத்துவதன் மூலம், கிராமங்களில் வைரஸ் பரவாமல் மக்களை பாதுகாக்க முடியும்.

இக்காலப் பகுதியில் மக்கள் மிக அவதானத்துடனும் பொறுப்புடனும் செயற்படல் வேண்டும். உரிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உரிய தரப்பினரை ஒன்றினைத்து வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான

# இரண்டாவது தடுப்பூசி கிடைக்கவில்லை

■ மு.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி மாவட்டத்துக்கான கொரோனா தடுப்பூசியின் இரண்டாவது தடுப்பூசி, இன்னும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்த கிளிநொச்சி பிராந்திய தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன், தடுப்பூசி கிடைத்ததும் விவரங்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தடுப்பூசி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, தடுப்பூசியை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்றார்.

மாவட்டத்துக்கான தடுப்பூசி விரைவில் கிடைக்கப்பெறும் எனவும் எனவே, அப்போது பொதுமக்களுக்கு அறிவித்தல் வழங்குவோம் எனவும் கூறினார்.

அத்துடன், இந்த முறை, இரண்டாவது தடுப்பூசியானது, முதலாவது தடுப்பூசி செலுத்தப்பட்ட குறிப்பிட்ட நிலையங்களில் செலுத்தப்படாது. பொதுமக்கள் அதிகமான ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் வகையில், பிரதேசங்கள் ரீதியாக தடுப்பூசி செலுத்தப்படும் நிலையங்கள் உருவாக்கப்பட்டு, இரண்டாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், அவர் தெரிவித்தார்.

முதன் முதலாக

# நவீன அதிதீவிர சிகிச்சைப் பிரிவு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்





மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முதலாக பல கோடி ரூபாய் செலவில் கொவிட் நோயாளிகளுக்கான நவீன அதி தீவிர சிகிச்சைப் பிரிவு, களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரிவானது, கொரோனா வைரஸால் மோசமாக பாதிக்கப்பட்ட நோயாளிகளை வைத்து அதி தீவிர சிகிச்சையளிக்கும் பிரிவாக இயங்கவுள்ளதாக, வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் புவனேந்திரநாதன் தெரிவித்தார்.

இதனை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் வைத்திய அத்தியட்சகர் தலைமையில் நிறைவடைந்துள்ளது.



### சமூக உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

எம்.செல்வராஜா

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்ட அபிவிருத்தி நிதியத்தின் (யு.என்.டி.பி) அனுசரணையுடன் சமூகத் தொடர்பாடல்கைளை மேம்படுத்துவதற்கான, சமூக உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக, ஊவா சக்தி நிறுவன முதல்வர் நடேசன் சுரேஸ் தெரிவித்தார்.

ஊவா சக்தி நிறுவன பதுளை பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், “ஊவா மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளுக்கு பிரஜைகளின் பங்களிப்புக்களை அதிகரித்துக்கொள்ளல்” என்ற தொனிப்பொருளில் மேற்படி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய, ஊவா மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் திறன் மேம்பாட்டு கருத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதும், சமூகத் தொடர்பாடல்களை மேம்படுத்துவதற்குமானதுமான இவ்வேலைத்திட்டத்தை செயல்படுத்துவதற்கென, 11 சமூக உத்தயோகத்தர்கள் முதற்கட்டமாக நியமிக்கப்படவுள்ளனர் என்றார்.

பதுளை மாவட்டத்தில் 15 பிரதேச சபைக்கு இரு மாநகர சபைகள் ஒரு நகர சபை மற்றும் மொனராகலை மாவட்டத்தில் 10 பிரதேச சபைகள் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக, இவ்வேலைத்திட்டம் அமைந்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் 8 சமூக உத்தியோகத்தர்களும், மொனராகலை மாவட்டத்தில் 3 சமூக உத்தியோகத்தர்களுமாக 11பேர் நியமிக்கப்படவுள்ளனர்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்படிப்பு அல்லது க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல், சமூக தொடர்பாடல் நியமனங்களில் மூன்று வருட அனுபவம், மும்மொழி ஆற்றல், தமிழ் , சிங்கள மொழிகளில் சேவைத்திறன் , கணினி பயன்படுத்தும் ஆற்றல், மோட்டார் சைக்கிள் ஓட்டும் ஆற்றல் மற்றும் அதற்கான அனுமதிப்பத்திரம் ஆகியனவற்றைக் கொண்டவர்கள் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இவ்விண்ணப்பங்களைஎதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தலைமைப் பொறுப்பதிகாரி , சி.டி.எல்.ஜி கருத்திட்டப்பிரிவு , ஊவா சக்தி நிறுவனம், இல 16\12, 02 ஆம் ஒழுங்கை , கிழ் ராஜ வீதி, பதுளை எனும் முகவரிக்கோ அல்லது fuvashakthi@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு 055-2231750 , 077-2194705 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் தெரிவித்தார்.

### முதலமைச்சரைச் சந்தித்த இராஜாங்க அமைச்சர் ஜீவன்

# இருதரப்பு கலந்துரையாடல்

பி.கேதீஸ், ஆர்.ரமேஸ்

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இராஜாங்க அமைச்சரின் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, நேற்று முன்தினம் (1) இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, தமிழ் நாட்டுக்கும் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் செறிந்துவாழும் மலையகத்துக்கும் இடையிலான இருதரப்பு பரஸ்பர உறவுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. மேலும், மலையகத்துக்கான அபிவிருத்தி பணிகள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.




இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் அம்மக்களுக்கு அறிவித்துள்ள நலத்திட்டங்களுக்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் இச்சந்திப்பின் போது தெரிவித்ததோடு, இத் திட்டங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடம் பரிந்துரைப்பதாகவும் தமிழ் நாட்டு முதலமைச்சரிடம் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

மேலும், இந்திய வம்சாவளி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் திராவிட முன்னேற்ற கழகத்துக்கும் இடையிலான உறவு நீடிக்கும் எனவும் இதன்மூலம் இந்திய அரசாங்கத்தின் பல்வேறு அபிவிருத்திகள் மலையக மக்களுக்கு வந்தடையும் எனவும் நம்பிக்கை கொள்வதாக ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

### வாகன உதிரிப்பாகங்களை

## திருடி வந்தவர் சிக்கினார்

சேஹ்ன் செனவிரத்ன

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பதென்ன பிரதேசத்தில் உள்ள வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்தில் 2.9 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாகன உதிரிப்பாகங்களை திருடியச் சம்பவத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் குறித்த வர்த்தக நிலையத்தில் வேலை செய்யும் நபர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை சந்தேகநபரால் திருடிச் செல்லப்படும் பொருள்களை கொள்வனவு செய்த மற்றுமொரு நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேகநபர் மிக நீண்டநாள்களாக இந்த திருட்டு தொழில் ஈடுபட்டு வந்துள்ள நிலையில், கடையின் உரிமையாளர் சந்தேகம் கொண்டு, பாதுகாப்பு கமெரா காணொளிகளை பரீட்சித்த போதே, இந்தச் சம்பவம் அம்பலமாகியுள்ளது என்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில், சந்தேகநபர்களிடம் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.








## ‘சீனி’ வரிசை

‘லங்கா சதொச’ நிறுவனங்களில் நேற்றிலிருந்து (2) 130 ரூபாய்க்கு சீனி வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதையடுத்து, ஹட்டன், மடவளை- வத்துகாமம் ஆகிய இடங்களிலுள்ள ‘லங்கா சதொச’ நிறுவனத்துக்கு முன்பாக, சீனி கொள்வனவுக்காக அதிகளவு மக்கள் வரிசைகளாகக் காத்திருந்ததைக் காணலாம்.
( படங்கள்: மொஹொமட் ஆஸிக், ரஞ்சித் ரஜபக்ஸ)

### இராகலைக்கு கிடைத்த சீனி

## நுவரெலியாவுக்கு கிடைக்கவில்லை

ஆ.ரமேஸ்

நுவரெலியா மற்றும் இராகலை நகரில் இயங்கும் சதொச மொத்த விற்பனை நிலையங்களில், சீனியை மாத்திரம் கொள்வனவு செய்வதற்காக, குறித்த நகரங்களை அண்மித்த தோட்டங்களைச் சேர்ந்த அதிகளவானோர், நேற்று (02) காலை நகரங்களுக்கு வருகை தந்திருந்தனர்.

இதன் போது இராகலை சதொசமொத்த விற்பனை நிலையத்தில் ஒரு கிலோ கிராம் சீனி 130 ரூபாய்க்கு, நுகர்வோருக்கு வழங்கப்பட்டது.

எனினும் நுவரெலியா- லோசன் வீதியில் அமைந்துள்ள சதொச மொத்த விற்பனை நிலையத்தில், நேற்றும் (2) நேற்று முன்தினமும் சீனிக்கு தட்டுபாடு நிலவியதால், சீனி வாங்குவதற்குச் சென்றவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.



இது தொடர்பில் நுவரெலியா சதொச மொத்த விற்பனை நிலைய முகாமையாளரிடம் வினவியபோது, தற்போது சீனி தமது விற்பனை நிலையத்தில் இல்லை என தெரிவித்த அவர், இன்று (3) போதியளவு சீனி தமது சதொச நிலையத்துக்குக் கிடைக்கும் என்றார்.

### ஹபுகஸ்தென்ன தோட்ட மக்களுக்கு

## நிவாரண உதவிகள் வழங்கிவைப்பு

ரா.கமல்

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிவாரண தொகை கிடைக்கப்பெறாத குடும்பங்களுக்கு, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உள்ளடங்கிய நிவாரண பொதிகளை வழங்கும் நிகழ்வு, அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களின் ஆலோசனைக்கமைய இரத்தினபுரி, ஹபுகஸ்தென்ன தோட்டத்தில் முன்னெடுக்கப்பட்டதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாள் தெரிவித்தார்.



குறித்த தோட்டத்தை சேர்ந்த கொவிட் -19 நோய்த் தொற்றாளர்கள் உள்ளிட்ட 65 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், குறித்த பிரதேசத்தில் அன்றாட வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கும் நிவாரணப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

## முதியோர் கொடுப்பனவு வழங்கப்பட்டன

ரஞ்சித் ராஜபக்ஸ

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக, அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுக்கு மத்தியில், முதியோர்களுக்கான ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைகள், நேற்றும் (02) நேற்று முன்தினமும் (01) நாடுபூராகவுமுள்ள அனைத்து தபாலகங்களிலும் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய, மலையகத்தின் பிரதான நகரங்களான ஹட்டன்- , பொகவந்தலாவை உள்ளிட்ட பல நகரங்களிலுள்ள பிரதான தபாலகங்களுக்கு வருகைத் தந்த முதியவர்களுக்கு, சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.



### தொற்றாளர்களை கொண்டு செல்வது தொடர்பில்

## ஓட்டோ சாரதிகளுக்கு சிறப்பு பயிற்சி



எண்.ஆராச்சி

கேகாலை மாவட்டத்தில் ஓட்டோ சாரதிகளுக்கு சிறப்பு பயிற்சி செயற்றிட்டம் ஒன்று, கேகாலை மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் மற்றும் வீடுகளில் இருக்கின்ற தொற்றாளர்களை பாதுகாப்பாக வைத்தியசாலைகளுக்குக் கொண்டுச் செல்லல் மற்றும் அவர்களை மீண்டும் வீடுகளுக்கு அழைத்து வரும் போது, பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பில், ஓட்டோ சாரதிகளை தெளிவுப்படுத்தும் நடவடிக்கையாக இது முன்னெடுக்கப்பட்டது.

கேகாலை- மொலகொட பிரதேசத்தில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன், எதிர்வரும் நாள்களில் கேகாலை நகரை அண்மித்த பல இடங்களிலும் தலா 5 ஓட்டோ சாரதிகள் தெரிவுசெய்யப்பட்டு, இந்தப் பயிற்சி நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக கேகாலை மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

### மலையகத்தில் கூலி வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கு

## நிவாரண உதவிகளை வழங்க நடவடிக்கை

### புரடெக் அமைப்பு ஏற்பாடு

.சுதத். எச்.எம்.ஹேவா

கொரோனா தொற்றால் அரசாங்கம் அமுல்படுத்தியுள்ள ஊரடங்கு உத்தரவுக்கு மத்தியில், பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க புரடெக்ட் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது என, அந்த அமைப்பின் உப தலைவரும் நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்பாளரமான கே.மைதிலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருந்தாலும் பெரும்பாலான தோட்டங்களில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி அன்றாட தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால், அவர்களுக்கு மாதாந்தம் சம்பளம் கிடைக்கும். ஆனால் பெருந்தோட்டங்களில் அன்றாட தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.




எதிர்வரும் நாள்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு, சில நிவாரண உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் வழங்கப்படும் 2,000 ரூபாய் நிவாரணக் கொடுப்பனவு விடயத்திலும் கிராம உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார்.

### அதிக விலைக்கு

## சீமெந்து விற்றவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

இரா.சுரேஸ்குமார்

பதுளையில் அதிக விலைக்கு சீமெந்து விற்பனை செய்த லொறியொன்று, நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகளால் நேற்று முன்தினம் (01) சுற்றிவளைக்கப்பட்டது.

அத்துடன், குறித்த லொறியின் சாரதிக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை- முத்தியங்கனை விகாரையின் பின்புறமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் லொறியிலேயே அதிக விலைக்கு சீமெந்து விற்பனை செய்யப்படுவதாக பதுளை மாவட்ட நுகர்வோர் விவகார அதிகார சபையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய, ஒரு மூடை சீமெந்து 1,150 ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. மேலும், குறித்த லொறியில் 600 மூடை சீமெந்துகள் மிகுதியாக இருந்த நிலையில், ஏற்கெனவே 400 மூடைகள் விற்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து, லொறியின் சாரதி, நுகர்வோர் விவகார அதிகார சபையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன், அவருக்கு எதிராக பதுளை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சடலங்களில் இனவாதத்தைத் தட்டியெழுப்பும் துர்ப்பாக்கியம்

தற்போது அமலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், மாநாயக்கதேரர்களின் வலியுறுத்தலின் பின்னரே, எடுக்கப்பட்ட தீர்மானமென்பது வெளிப்படையாகும். சுகாதார துறையினரின் பரிந்துரைகளை ஏறெடுத்தும் பார்க்காத, அரசாங்கம் மாநாயக்கரின் கோரிக்கைக்கு செவிசாய்த்துள்ளது.

சிங்கள-பௌத்த அரசாங்கம் என்பதை மீண்டும், மீண்டும் பெரும்பான்மையின மக்களிடத்தில் நினைவுறுத்தும் வகையில், இவ்வாறான அரசியல் வியூகங்களை கையாளக்கூடும். இது, இன்று நேற்றல்ல, காலங்காலமாக கடைப்பிடிக்கப்படுகின்ற ஒரு முறைமையாகும். ஆனால், மக்கள் செத்து மடிந்து கொண்டிருக்கும் நிலையில், நிபுணர்களின் பரிந்துரைகளுக்கே ஆகக்கூடுதலான முக்கியத்துவத்தை வழங்கவேண்டும்.

எந்த மதத்தலைவராக இருந்தாலும் அன்பு, கருணை, சகோதரத்துவம், உதவும் மனப்பான்மை, உள்ளிட்டவற்றை ஒவ்வொருவரிடத்திலும் ஊட்டவேண்டும். இதுவே, காலத்தின் தேவையாகும். ஆனால், தற்போதிருக்கும் மதத்தலைவர்களின் ஒருசிலரின் செயற்பாடுகளை பார்க்குமிடத்து ஐயுறவுக்கொள்ளவேண்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோர், மரணிப்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் எகிறிகொண்டே செல்கின்றன. இதனிடையே, கொரோனா மரணங்களின் தரவுகளை அரசாங்கம் மறைப்பதாகவும் மேஜர் ஜெனரல் ஒருவரே இவ்வாறு தரவுகளை திரிபுபடுத்துவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இந்நிலையில், தனியார் தொலைக்காட்சி ஊடகமொன்றின் நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்த யட்டியந்தோட்ட சந்திரானந்த தேரர், கொரோனா தொற்றில் மரணிப்போரின் சடலங்களை இன ரீதியாக அதாவது, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என வகைபிரித்து அடையாளங்கண்டு, தரவுகளை அம்பலப்படுத்தவேண்டுமென கோரிக்கைவிடுத்துள்ளார்.

யாரை? எப்பொழுது கொரோனா கொல்லுமென ஒவ்வொருவரும் பதற்றத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையில், கொரோனா சடங்களை சுரண்டி அதிலிருந்து இனவாத அரசியல் கக்கி, அதிலிருந்து கிளம்பும் தீயில் குளிர்காய நினைக்கின்றார் இந்த மதகுரு. இது, மலசலத்தில் ஏதொவொன்றை தேடுவதற்கு ஒப்பானது என்றால் தவறுமில்லை.

பௌத்த தேரர்களின் கோரிக்கைகளுக்கு எல்லாம் செவிசாய்த்தாலும், இந்தக் கோரிக்கையை மட்டும் எக்காரணங்களையும் கொண்டு கணக்கிலெடுக்கக்கூடாது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாயின், இனங்களுக்கிடையில் பாரிய விரிசலொன்று ஏற்பட்டுவிடும்.

கொரோனாவால் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் உயிரிழக்கின்றனர் அல்லது பாதிக்கின்றனர் என்ற பிற்போக்குத்தனமான புள்ளிவிவரங்களை தேடிப்பார்க்காது, 'மனிதர்கள் மரணிக்கின்றனர்' என மனிதாபிமானத்துடன் பார்க்கவேண்டும்.

இந்நிலையில், யட்டியந்தோட்ட சந்திரானந்த தேரரின் கருத்துக்குப் பதிலளித்த ஊடகவியலாளர் ரொஷான் வட்டவலவின் தைரியத்தையும் பாராட்டியே ஆகவேண்டும். இனவாதத் தீயைக் கக்கிய தேரரின் வாயை அடைப்பது போல, 'மனிதம்' எவ்வாறானது என்பதற்கு, தேன் சொரிந்தாற்போல வண்ணத்துப்பூச்சிகளை பறக்கவிட்டு பதிலளித்துள்ளார்.

ஒவ்வொரு மனிதரின் உடம்பிலும் ஓடுவது சிவப்பு இரத்தம்; இனங்களின் அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதுடன், பல்லின மக்கள் ஒவ்வொருவருடைய இனத்துவ அடையாளமும் பாதுகாக்கப்பட்டு, மதிப்பளிக்கப்பட வேண்டும் என வலியுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

ஒருவர் ஏதோ ஒரு காரணத்துக்காகச் சின்ன விடயங்களில், அவமானப்படுத்தப்பட்டால், அதையே ஊதிப்பெருப்பிப்பதில் அநேகருக்கு ஆனந்தம். வழியில் தெருவில் நடந்துபோகும் அந்தநபரை சீண்டி, அவரது நெஞ்சத்தை நோகடிப்பார்கள்.

இத்தகைய கீழ்தரமான செயல்களைச் செய்பவர்கள், தங்களது ஒழுக்கச்சிதைவுகளை, உணராமல், அடுத்தவர்களை குறைகூறியபடி தங்களது பொழுதைப் போக்குவார்கள்.

இந்த உலகில் எதுதான் நடக்காமல் இல்லை? மன்சாட்சியை இதயத்தில் சிறைவைத்து விடுவார்கள். தாக்கத்துக்கு எிர் தாக்கம் உண்டு என்பதை உணரவேண்டும்.

செய்யாத குற்றத்துக்கு தண்டனை அனுபவிப்பதும் உண்டு. பொய்கள் மூலம் நீதிகளை மறைப்பவர்கள், அதை வருமானம் இன்றிச் செய்வதில்லை.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

புதிய போரொழுங்கின் முதலாம் அத்தியாயம் – 02

# 9/11க்கு முன்: கதைச் சுருக்கம்



தெ. ஞாலசீர்த்தி
மீநிலங்கோ

இதை எழுதத் தொடங்கும்போது, அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறிவிட்டன என்ற செய்தியை காணக் கிடைத்தது. 21ஆம் நூற்றாண்டின் முதலாவது ஆக்கிரமிப்புப் போர், 20 ஆண்டுகளுக்குப் பிறகு முடிவுக்கு வருகிறது.

இந்தக் கதை புதிதல்ல! இதேபோன்றதொரு கதை, கெடுபிடிப்போர் காலத்தில் வியட்நாமில் நடந்தேறியது. அமெரிக்கா, உலகப் பொலிஸ்காரனாகத் தன்னை நிலைநிறுத்திய பின்னர், இவ்வாறு ஆக்கிரமித்த பகுதியில் இருந்து வெளியேறுவது, இது இரண்டாவது தடவை ஆகும்.

பேர்லின் சுவரின் இடிப்பைத் தொடர்ந்து, முடிவுக்கு வந்த இருமைய உலகுக்கும், அமெரிக்காவின் வர்த்தக மையக் கட்டடங்களின் மீதான விமானத் தாக்குதல்களைத் தொடர்ந்த 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்திற்கும்' இடையே நிகழ்ந்தவொரு சம்பவம் முதன்மையானது.

அந்த நிகழ்வுக்கும் இப்போதைய ஆப்கானிஸ்தான் நிலைமைக்கும் இடையே பல ஒற்றுமைகள் உண்டு. அந்த நிகழ்வையும் அதைத் தொடர்ந்த அமெரிக்கக் கொள்கை வகுப்பையும், கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம்.

1990களின் தொடக்கத்தில், சோவியத் ஒன்றியத்தின் உடைவைத் தொடர்ந்து, உலகின் முதன்மையான வல்லரசாக அமெரிக்கா தன்னை நிலைநிறுத்தத் தொடங்கியிருந்தது. சோமாலியாவில் 1991ஆம் ஆண்டு நிகழ்ந்த ஆட்சிக்கவிழ்ப்பைத் தொடர்ந்து, அங்கு உச்சம் பெற்ற உள்நாட்டுப் போர், சர்வதேச கவனம் பெற்றது.

1992ஆம் ஆண்டு ஏற்பட்ட மிகப்பெரிய பஞ்சத்தால், மூன்று இலட்சம் சோமாலியர்கள் பட்டினியால் இறந்தார்கள். இதைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபை, உதவிகளை மேற்கொள்ள சோமாவில் களமிறங்கியது. ஒருபுறம் பஞ்சம், இன்னொருபுறம் போர் என இருமுனைகளில் சவால்களை எதிர்கொண்டது. 37,000 படைவீரர்களைக் கொண்ட ஐ.நா அமைதிகாக்கும் படைகள் களமிறங்கின. இதில் 25,000 பேர் அமெரிக்கப் படைவீரர்கள். இது குறித்துப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், "சோமாலியாவில் நடக்கும் கொடுமைகளைத் தடுத்து, அங்கு பாதுகாப்பை வழங்கக்கூடிய ஒரே நாடு அமெரிக்கா தான். அமெரிக்கா தன் கடமையைச் செய்யும்' என்று சொன்னார். 1992 டிசெம்பரில் அமெரிக்கப் படைகள் சோமாலியாவில் களமிறங்கின.

1993 மார்ச் மாதம், உள்நாட்டுப்போரில் ஈடுபட்டிருந்த 15 ஆயுதக்குழுக்களும் எதியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவில் சந்தித்து அமைதியைக் கடைப்பிடிக்க உடன்பட்டன. ஆனால் கொஞ்சக்காலத்தில் முஹமட் அடீட் தலைமையிலான குழுவினர் அந்நியப் படைகளின் இருப்பை எதிர்த்தனர்.

புதிய அரசாக்க முயற்சிகளில், தானும் தனது குழுவினரும் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாகவும் ஐ.நா தன்னைத் திட்டமிட்டு ஒதுக்குவதாகவும் குற்றஞ்சாட்டினார். அவர் சோமாலியாவின் தலைநகர் மொகடீசுவின் வானொலியில் ஐ.நாவுக்கு எதிராகப் பிரசாரம் செய்தார்.

சோமாலியாவில் நிலைகொண்டிருந்த ஐ.நா அமைதிகாக்கும் படைகள் அந்த வானொலி நிலையத்தை மூடுமாறு உத்தரவிட்டனர். அதை நடைமுறைப்படுத்த ஐ.நா படைகள் அனுப்பப்பட்டன. இது அடீட் அவர்களின் படைகளுக்கும் ஐ.நா படைகளுக்கும் இடையில் மோதலை உருவாக்க காரணமானது. இதைத் தொடர்ந்து அமெரிக்கப் படைகள், அடீட்டைக் கைது செய்வதற்கான மொஹடீசுவில் பல தாக்குதல்களை மேற்கொண்டன. இது ஒருபுறம் அமெரிக்கப் படைகள் மீதான வெறுப்பையும், மறுபுறமும் அடீடுக்கான ஆதரவையும் சோமாலியர்கள் மத்தியில் உருவாக்கியது.

அமைதிகாக்கும் படைகளாகக் களமிறங்கிய ஐ.நா படைகள், தாக்குதல்களில் ஈடுபட்டதன் மூலம், சோமாலியாவின் உள்நாட்டுப் போருக்குள் தம்மை இழுத்துக் கொண்டன. சோமாலிய உள்நாட்டுப் போரின் அரங்காடிகளாக இப்படைகள் மாறின.

இது, ஐ.நா நடுநிலை நோக்கோடு இல்லை; போரிடுகின்ற தரப்புகளில், தனக்கு வாய்ப்பான தரப்புக்கு ஏற்ற வகையில் செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டை, அடீடும் அவரது சகாக்களும் முன்வைத்தார்கள். இதே மனநிலை, மெதுமெதுவாக சோமாலியர்களிடம் உருவானது.

அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியாக பில் கிளின்டன் பதவியேற்றிருந்தார். ஐ.நாவுக்கான புதிய அமெரிக்கத் தூதுவராகப் பொறுப்பேற்ற மடலீனா ஆல்பிரைட், ஐ.நா பாதுகாப்புச் சபையில், ஐ.நா படைகளின் கொலைக்குக் காரணமானவர்கள் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார்.

இதைத்தொடர்ந்து, ஐ.நா செயலாளர் நாயகத்தின் சோமாலியாவுக்கான சிறப்புப் பிரதிநிதியாகப் பதவியேற்றிருந்த அமெரிக்க கடற்படை அட்பிரல் ஜொனதான் கோவ், அடீட்டின் தலைக்கு 25,000 அமெரிக்க டாலர்களை வெகுமதியாக அறிவித்தார். ஐ.நாவின் அனைத்து முடிவுகளையும் பதவிகளையும், திட்டமிடும் செயற்படுத்தும் தன்னிகரற்ற அதிகாரத்தை அமெரிக்க அப்போது கொண்டிருந்தது.

1993ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி அடீட்டின் மறைவிடம் தொடர்பான புலனாய்வுத் தகவலின்படி, ஒரு வீட்டில் அடீட்டின் ஆட்கள் கூடியிருப்பது தெரியவந்தது. அமெரிக்கப் படைகள் அவ்வீட்டைக் குறிவைத்துக் களத்தில் இறங்கின. இதற்கு 'ஒபரேசன் மிச்சிகன்' எனப் பெயரிட்டனர். தாக்குதலில் 200க்கும் மேற்பட்ட சோமாலியப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். அமெரிக்கப் படைகள் குறிவைத்துத் தாக்கிய வீட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த கூட்டத்தில், சோமாலியாவின் முக்கியமான முதியவர்கள் ஒன்றுகூடி, போராளிக்குழுக்களுடன் சமாதானத்தை உருவாக்குவது பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள் என்பது, அமெரிக்கப் படைகளுக்குப் பின்பே தெரியவந்தது.

குறித்த கூட்டம் தொடர்பிலான செய்தி, குறித்த திகதிக்கு முதல்நாள் பத்திரிகைளில் வெளிவந்திருந்தது. குறித்த சம்பவத்தைத் தொடர்ந்து, அங்கு செய்தி சேகரிக்கப் போன மேற்கத்திய ஊடகங்களைச் சேர்ந்த நான்கு ஊடகவியலாளர்கள், கோபத்தில் இருந்த பொதுமக்களால் கொல்லப்பட்டார்கள்.

ஒகஸ்ட் எட்டாம் திகதி அடீடின் படைகள், அமெரிக்கப் படைகளைக் குறிவைத்த கண்ணிவெடித் தாக்குதலில், நான்கு அமெரிக்கப் படைவீரர்கள் கொல்லப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து, சிறப்பு இராணுவத்தினரைக் கொண்ட படையணியல் 400 வீரர்களை, சோமாலியாவுக்கு அனுப்ப கிளின்டன் முடிவெடுத்தார். இதேவேளை, அடீடுடன் இரகசியமாகப் பேசுவதற்கும் அமெரிக்கா முடிவெடுத்தது. இதன்படி, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டரின் தலைமையிலான குழு, இதில் ஈடுபட்டிருந்தது.

இந்த நிகழ்வுகள், தலிபானுடனான அமெரிக்காவின் நடத்தையை ஒத்தன. ஒருபுறம், போர் புரிந்தபடி, இரகசியமாகப் பேச்சுக்களில் ஈடுபடுவதை அமெரிக்கா வழமையாகக் கொண்டிருந்தது. 2008ஆம் ஆண்டுமுதல் தலிபான்களுடன் அமெரிக்கா பேசுகிறது. மறுபுறம், அதிகமான படைகள் ஆப்கானுக்கு அனுப்பப்பட்ட ஆண்டாகவும் 2008ஆம் ஆண்டே இருக்கிறது என்பதையும் இங்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆடீடையும் அவரது தளபதிகளையும் எப்படியாவது கைதுசெய்வது என்று அமெரிக்கா முடிவெடுத்திருந்தது. 1993ஆம் ஆண்டு ஒக்டோபரில், அடீட்டின் இருப்பிடம் குறித்த இரகசியத் தகவல் கிடைத்தது. தாக்குதலில் அமெரிக்கப் படைகள் இறங்கின. அமெரிக்கா எதிர்பார்த்ததற்கு மாறாக நிலைமைகள் மாறின. இரண்டு வானூர்திகள் சுட்டு விழுத்தப்பட்டதுடன், துப்பாக்கிச்சண்டையில் 19 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். ஒரு படைவீரர் உயிரோடு பிடிக்கப்பட்டார். ஏராளமான சோமாலியப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

உலகின் வல்லரசாகத் தன்னை நிலைநிறுத்தியிருந்த அமெரிக்கா, சோமாலியாவில் ஒரு மோசமான தோல்வியைச் சந்தித்தது. அமெரிக்கப் படைவீரர்களின் உடலை, சோமாலியர்கள் தெருவில் கட்டி இழுத்துச் செல்லும் காட்சிகள் அதிர்ச்சி தருவனவாக இருந்தன.

இதன் விளைவாக, சோமாலியாவில் அமெரிக்கப் படைகளின் தாக்குதல் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த, கிளின்டன் உத்தரவிட்டார். 1994 மார்ச் 21ம் திகதிக்குள், அமெரிக்கப் படைகள் சோமாலியாவில் இருந்து முழுமையாக வெளியேறும் என அறிவித்தார்.

1995 மார்ச்சில் அமெரிக்கப் படைகள் முழுமையாக வெளியேறின. இந்தத் தோல்வி அமெரிக்காவின் 'சர்வ வல்லமை வாய்ந்த வல்லரசு' என்ற அமெரிக்காவின் நிலைக்கு பெருத்த அடியாகியது.

தனது தொழில்நுட்ப இராணுவ வலிமையால், சாதாரண சிறுரக ஆயுதங்களை மட்டும் கொண்டிருந்த, முறையாகப் பயிற்றப்படாத போராளிகளிடம், அமெரிக்கா தோல்வியைச் சந்தித்திருந்தது. மரபார்ந்த பண்டைய தொடர்பாடல் முறைகள், கொண்டிருந்த சோமாலியப் போராளிகளின் தகவல் பரிமாற்றங்களை இடையீடு செய்யவோ, ஒட்டுக்கேட்கவோ அமெரிக்கப் புலனாய்வால் முடியவில்லை.

அதேவேளை, இதேபோன்ற முரண்பாடுகளில் தலையிடக்கூடாது என்ற நிலைப்பாட்டை கிளின்டன் எடுத்தார். அது, நீண்டகாலம் நிலைக்கவில்லை. ஆனால், சிலவற்றில் தலையிடாமல் இருப்பதற்கான வாய்ப்பை இது கொடுத்தது. குறிப்பாக, ருவாண்டாவில் மூன்று இலட்சம் பேர் கொல்லப்பட்டபோது, ஐ.நா அமைதிப்படைகள் அமைதியாக இருந்தது முதல், மேற்குலகம் தலையிடாமைக்கு மொகடீசு அனுபவம் முக்கிய காரணமானது.

மொகடீசு அனுபவம் பல புதிய திசைவழிகளை நோக்கி அமெரிக்காவை நகர்த்தியது. அதுவே, அடுத்த இருபதாண்டுகளுக்கு அமெரிக்க வெளியுறவுக் கொள்கை வகுப்பில் செல்வாக்குச் செலுத்தியது. அதுகுறித்து அடுத்தவாரம் பார்க்கலாம்.

(வெள்ளிக்கிழமை தொடரும்)

## கடிதங்கள்

### நீளவெட்டியா குளத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி?

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கில் வனவள திணக்களத்தின் கட்டுப்பட்டிலுள்ள கைவிடப்பட்ட நீளவெட்டியாகுளத்தினை புனரமைப்பதற்கு இரண்டு தடவைகள் நிதி விடுவிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த குளத்தின் கீழ் 18 ஏக்கர் காணிகள் உள்ள நிலையில் 38 காணித் துண்டுகளை வழங்குவதற்கான அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கைவிடப்பட்டதும் வனவளத் திணைக்களத்தின் கீழ் இருந்து இதுவரை விடுவிக்கப்படாத குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற நீள வெட்டிய குளம், கடந்த 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டதுடன், குளத்தின் கீழான வயல் காணிகளும் துப்பரவு செய்யப்பட்டன

மேற்படி குளத்தின் கீழ், 18 ஏக்கர் காணிகள் மாத்திரமே மாத்திரமே இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், பயனாளி ஒருவருக்கு ஒரு ஏக்கர் வீதம் 38 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன

அதேவேளை, வயல் காணிகளை புனரமைப்பதற்கு இரண்டு தடவைகள் நிதி விடுவிக்கப்டுள்ளன. பிரதேச செயலகத்தால் 42 ஏக்கர் காணிகளை துப்புரவு செய்வதற்கான நிதி ஒதுக்கப்பட்டு 26 ஏக்கர் துப்பரவு செய்வதற்கான நிதிமாத்திரமே விடுவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, காணி குறைந்த அளவு காணி உள்ள ஒரு குளத்தில் அதிகளவு நிலப்பரப்பு காட்டப்பட்டு அதன் துப்புரவுக்கு பெருந்தொகை நிதி விடுவிக்கப்பட்டுள்ளது ஒருபுறமிருக்க, 18 ஏக்கர் காணி மாத்திரமே இருக்கின்ற போது, மேலதிகமாக 20 அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருப்பது தொடர்பிலும் பல்வேறு தரப்பினரும் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

-யது பாஸ்கரன்

புதுடெல்லி

5 முதல் 18 வயதுக்குட்பட்டோருக்கு

# ‘கோர்பிவாக்ஸ் தடுப்பூசி சோதனைக்கு அனுமதி’

5 முதல் 18 வயது பிரிவினரிடம் சில நிபந்தனைகளுடன் இரண்டு மற்றும் மூன்றாம் கட்ட தடுப்பூசி சோதனையை நடத்த பயாலஜிகல்-இ நிறுவனத்துக்கு இந்திய தலைமை மருந்து கட்டுப்பாட்டாளர் அனுமதி வழங்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

பயாலஜிகல்- இ நிறுவனத்தால் முற்றிலும் இந்தியாவிலேயே தயாரான கோர்பிவாக்ஸ் (Corbevax) தடுப்பூசியை சோதித்து பார்க்கலாமென தடுப்பூசி நிபுணர் குழு பரிந்துரைத்தது. இதை தொடர்ந்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த சோதனை பத்து இடங்களில் நடத்தப்படும்.



ஆர்பிடி புரோட்டீன் அடிப்படையிலான இந்த தடுப்பூசியின் இரண்டு மற்றும் 3 ஆம் கட்ட சோதனைகள் தற்போது பெரியவர்களிடம் நடத்தப்பட்டு வருகிறது.


இது செலுத்தப்படும் போது கொரோனா ஸ்பைக் புரோட்டீனை உற்பத்தி செய்து, உடலில் அதற்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை தூண்டும்.

இந்த தடுப்பூசியை 3 டோஸ்கள் போட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

சைடஸ் கடிலாவின்- வின் ஊசி இல்லாத கொரோனா தடுப்பூசி சைகோவ்-டி (ZyCoV-D) ஏற்கனவே, 12முதல்18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போட அவசர பயன்பாட்டு அங்கிகாரம் பெற்றுள்ளது. இது அக்டோபர் முதல் வாரத்திலிருந்து தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாரத் பயோடெக்கின் கோவாக்ஸின் கொரோனா தடுப்பூசியின் குழந்தைகளுக்கான தடுப்பூசிகளின் 2 & 3 ஆவது கட்ட சோதனைகள் நடந்து வருகின்றன, அதன் முடிவு செப்டம்பரில் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜம்மு காஷ்மீர்



# பிரிவினைவாத தலைவர் காலமானார்

ஜம்மு காஷ்மீரின் மூத்த பிரிவினைவாத தலைவரான செய்யது அலி கிலானி (92 வயது) காலமானார். அவரது மறைவுக்கு பிடிபி கட்சி தலைவர் மெஹ்பூபா முப்தி இரங்கல் தெரிவித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பிரிவினைவாத இயக்கமான ஹூரியத் மாநாட்டுக் கட்சி தலைவர் செய்யத் அலி ஷா கிலானி கடந்த சில ஆண்டுகளாகவே உடல்நிலை பாதிப்புக்குள்ளாகி இருந்தார். இந்நிலையில், உடல்நலக்குறைவால் அவர் காலமானதாக, மக்கள் ஜனநாயக கட்சியின் (பிடிபி) தலைவர் மெஹ்பூபா முப்தி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு 10.30 மணிக்கு அவர் காலமானதாக குடும்பத்தினர் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து முப்தி தனது டுவிட்டரில் பதிவிட்டதாவது: ‘கிலானியின் மறைவு செய்தி வருத்தம் அளிக்கிறது. பல விஷயங்களில் எங்களுக்கிடையே உடன்பாடு ஏற்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவரது உறுதித் தன்மை மற்றும் தன்னம்பிக்கைக்காக நான் அவரை மதிக்கிறேன். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு இறைவன் ஆறுதல் வழங்கட்டும்.’ இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

சென்னை

# சிவசங்கர் பாபா மீது மேலும் 2 வழக்குகள்



சென்னையை அடுத்த கேளம்பாக்கத்தில் தனியார் பாடசாலையை நடத்தி வந்த சிவசங்கர் பாபா மீது அந்த பாடசாலையின் முன்னாள் மாணவிகள் பாலியல் புகார் அளித்தனர்.புகாரின் அடிப்படையில் சிவசங்கர் பாபா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவர் மீது 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. செங்கல்பட்டு நீதிமன்றத்தில் சிபிசிஐடி பொலிஸார் சிவசங்கர் பாபா மீது, 300 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளனர். மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளித்த வழக்கில் 40 பேர் சாட்சியங்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் முன்னாள் மாணவியின் தாயாருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக சிவசங்கர் பாபா மீது மேலும் 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டிலுள்ள முன்னாள் மாணவி ஒருவர் மற்றும் பெங்களூரைச் சேர்ந்த மாணவி ஒருவரின் தாய் அளித்த புகாரின் அடிப்படையில் மேலும் ஒரு போக்சோ வழக்கு மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்கீழ் சிபிசிஐடி பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

புதுடெல்லி

# இந்தியாவில் திடீரென கொரோனா அதிகரிப்பு

இந்தியாவில் கொரோனா இரண்டாவது அலை பரவல் கணிசமாக குறைந்து வந்தது. ஆனால், கடந்த சில நாட்களாக கொரொனா பாதிப்பு திடீரென அதிகரிக்கத்தொடங்கியுள்ளது.

இந்நிலையில், மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 47 ஆயிரத்து 092 பேருக்கு தொற்று பாதிப்பு உறுதியாகி உள்ளது. இதன்மூலம் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை



3,28,57,937 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல், தொற்று பாதிப்புகளுக்கு ஒரே நாளில் 509 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 4,39,529 ஆக உயர்ந்துள்ளது. உயிரிழந்தோர் விகிதம் 1.35% ஆக உள்ளது.


புதுடெல்லி

மகாத்மா காந்தி படுகொலை தொடர்பாக

# வெளிவராத தகவல்கள் வெளியீடு

மகாத்மா காந்தி படுகொலை தொடர்பாக, இதுவரை வெளிவராத உளவுத்துறை தகவல்கள், பொலிஸ் ஆவணங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட புதிய புத்தகமொன்று அக்டோபர் முதலாம் திகதி வெளியிடப்படவுள்ளது.

மகாத்மா காந்தி படுகொலை சம்பவம் குறித்து பல்வேறு புத்தகங்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில், ‘தி மர்டரர், தி மொனார்ச் அண்ட் தி பக்கிர்’ என்ற தலைப்பில், புதிய புத்தகத்தை, ‘ஹார்பர் காலின்ஸ் இந்தியா’ பதிப்பகம், அக்டோபர் முதலாம் திகதி வெளியிடுகிறது. புலனாய்வு பத்திரிகையாளர் அப்பு எஸ்தோஸ் சுரேஷ் மற்றும் பிரியங்கா கோட்டம்ராஜு ஆகியோர் இணைந்து இந்த புத்தகத்தை எழுதியுள்ளனர்.



இது குறித்து அவர்கள் கூறியதாவது: காந்தி படுகொலைக்கான சூழல் எப்படி உருவானது என்பதை இந்த புத்தகம் மறு உருவாக்கம் செய்கிறது. அவர் சுடப்பட்டது வரையிலான சம்பவங்கள், அதன் பின்பான விசாரணை ஆகியவை குறித்து, வேறு கோணத்தில் இந்த புத்தகம் பேசுகிறது. இதுவரை வெளிவராத உளவுத்துறை தகவல்கள், பொலிஸ் விசாரணை ஆவணங்களின் அடிப்படையில் புலனாய்வு செய்து இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

சென்னை

# புலமைப்பித்தன் மருத்துவமனையில் அனுமதி

திரைப்பட பாடலாசிரியர் மற்றும் சட்டசபை முன்னாள் துணைத் தலைவர் புலமைப்பித்தன், வயது 85, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சென்னையில் வசித்து வரும் இவருக்கு, வயது மூப்பின் காரணமாக, உடல்நலக் குறைவு ஏற்பட்டது. சென்னை, அடையாறில் உள்ள, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவமனை இயக்குநர் நாகேஸ்வரன் வெளியிட்ட செய்தி குறிப்பில், ‘புலமைப்பித்தனுக்கு, உயிர் காக்கும் மருத்துவ கருவிகள்



உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவரது உடல்நிலையை மருத்துவ நிபுணர்கள் குழு, கண்காணித்து வருகிறது’ என, குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணி கையிருப்பை தக்க வைக்க

# வெளிநாட்டு கடன்களை நாடும் இலங்கை

நாட்டில் போதியளவு அந்நியச் செலாவணி கையிருப்பு இல்லாத நிலையில், அந்நியச் செலாவணி கையிருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு வெளிநாட்டுக் கடன்களை எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அமெரிக்க டொலர், யூரோ, ரென்மின்பி அல்லது ஜப்பானிய யென் போன்றவற்றில் இந்தத் தவணைக் கடன் வசதியை எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. ஆகக் குறைந்தது ஒரு வருட காலப்பகுதிக்கு இந்த கடன் வசதி வழங்கப்பட வேண்டும் என்பதுடன், 50 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகரானதாக அமைந்திருக்க வேண்டும். இந்த கோரலுக்கான மனுக்கள் செப்டெம்பர் 22ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அறிவித்துள்ளது.

ஜூலை மாத இறுதியில்



நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு 2.8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைந்தது. இந்நிலையில் கடந்த வாரம் பங்களாதேஷிடமிருந்து 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை மாற்றீட்டு கடனாகவும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 780 மில்லியன் அமெரிக்க டொலர்களை விசேட உரிமை வழங்கல் ஒதுக்கீடாகவும் பெற்றுக் கொண்டது.

இந்நிலையில் நாட்டின் பிணைமுறி ஏல விற்பனைகளில் போதியளவு கேள்வி இன்மையையும் அவதானிக்க முடிந்தது. இதனால் அந்நியச் செலாவணி இருப்பு மேலும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது.




Brandix அன்பளிப்பு

Brandix, அத்தியாவசிய மருத்துவ சாதனங்களை கேகாலை மாவட்ட பொது வைத்தியசாலை, மாவனெல்ல பொது வைத்தியசாலை மற்றும் சீதுவ இடைத்தங்கல் சிகிச்சை நிலையம் ஆகியவற்றுக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. சமூகத்தில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சைகளை பெற்றுக் கொடுக்கும் முயற்சிகளுக்கு கைகொடுக்கும் வகையில் இந்த அன்பளிப்பை மேற்கொண்டுள்ளது. நிறுவனத்தின் “மனுசத்கார” எனும் சமூகப் பொறுப்புணர்வு செயற்திட்டத்தின் நீடிப்பாக 12 வென்டிலேற்றர்கள் மற்றும் 18 ஒட்சிசன் செறிவூட்டல் அலகுகள் போன்றவற்றை இவ்வாறு அன்பளிப்புச் செய்திருந்தது.




மாணவர்களுக்கு இலவச இணைப்பு வசதியை வழங்கும்

# SLT-MOBITEL ‘Sip Nena Dayada’

SLT-MOBITEL, ஸ்ரீ சம்போதி மையத்துடன் இணைந்து, நாடு முழுவதையும் சேர்ந்த மாணவர்களுக்கு ஒன்லைன் கல்வியை தொடர்வதற்கு, இலவச ‘டேட்டா’ இணைப்பு வசதியை ஏற்படுத்தும் வகையில் ‘Sip Nena Dayada’ நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

ஸ்ரீ சம்போதி மையத்தால் தெரிவு செய்யப்பட்ட தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு ‘டெப்லட் ’ அன்பளிப்பு செய்யப்பட்டிருந்ததுடன், SLT-MOBITEL இனால் இலவசமாக இணைப்பு வசதி மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில், தடங்கலின்றி மாணவர்களுக்கு கல்வியைத் தொடர்வதற்கு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், இந்த நன்கொடை வழங்கப்பட்டிருந்தது.

SIMகளைக் கொண்ட முதல் தொகுதி சாதனங்கள், வட மேல் மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. மாகாணத்தின் பின்தங்கிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு, இந்த டெப்லட்கள் வழங்கப்பட்டிருந்தன. பௌத்த நம்பிக்கை மையத்தின் அதிகாரிகள், SLT-MOBITEL பிராந்திய முகாமையாளர்கள், இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து, புத்தளம், நிக்கவரெட்டிய, அம்பாறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தமது கல்வியைத் தொடர்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

நிதி நெருக்கடிகள், ‘டேட்டா’ இணைப்புத்திறன் வசதியற்ற மாணவர்களுக்கு உதவும் வகையில், SLT-MOBITEL ஆனது ஸ்ரீ சம்போதி மையத்துடன் இணைந்து, நாடு முழுவதிலும் இந்தக் கூட்டாண்மை, சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

# இறப்பர் செய்கையின் அழிவு ஆரம்பம்?

இறப்பர் மர இலைகளில் வேகமாகப் பரவும் ஒரு விதமான நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நாட்டில் கிருமிநாசினி இன்மை காரணமாக, இந்த ஆண்டில் இறப்பர் உற்பத்தி சுமார் 15 முதல் 20 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்யும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக, இறப்பர் தொழிற்துறை தெரிவித்துள்ளது.

விளைச்சல் குறையும்பட்சத்தில், இறப்பர் செய்கையில் ஈடுபடுவோர், மாற்று செய்கைகளுக்கு மாற வேண்டிய நிலைக்கு முகங்கொடுப்பார்கள் எனவும், முதிர்ச்சியடையாத இளம் இறப்பர் மரங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாரியளவு பண்ணைகள் மற்றும் சிறிய பயிர்ச் செய்கையாளர்களால் பயிரிடப்பட்டுள்ள 107,000 ஹெக்டெயர் பகுதியில் சுமார் 20,000 ஹெக்டெயர் பங்கஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதென இறப்பர் வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நாட்டினுள் விவசாய இரசாயன இறக்குமதிக்கு ஜனாதிபதி தடை விதித்துள்ள நிலையில், இறப்பர் மரங்களைப் பாதித்துள்ள இந்த நோயானது, இலகுவில் புரியும் வகையில் தெரிவிப்பதானால் கொவிட்-19 தொற்றைப் போன்றது. வேகமாகப் பரவுகின்றது என இறப்பர் வர்த்தக சம்மேளனத்தின் உப தவிசாளர் மனோஜ் உடுகம்பொல தெரிவித்தார்.

இறப்பர் பண்ணைகளுக்கு பங்கஸ் அழிப்பான்கள், கார்பன்டைசிம் மற்றும் ஹெக்ஸாகொனாசோல் போன்ற இரசாயனப் பதார்த்தங்களும் தாவரங்கள் மீட்சியடைவதற்கு உரமும் தேவைப்படுகின்றன.

ஆனாலும், கடந்த சில மாதங்களாக எமக்கு எவ்விதமான உரமும் கிருமிநாசினிகளும் கிடைப்பதில்லை. இந்நிலையில் இந்த நோய் பரவல் காரணமாக, தாவரங்களின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. இந்த நிலை தொடருமானால், அடுத்த வருடமளவில் இந்தத் துறை நிலைத்திருக்குமா எனும் கேள்வி எழுந்துள்ளது. இந்நிலையில் இறப்பர் செய்கையில் ஈடுபடும் நிறுவனங்கள் ஏலம், மிளகு, கறுவா போன்ற மாற்றுப் பயிர்ச் செய்கைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



ஆப்கானிஸ்தான்

# அமெரிக்க இராணுவத்தின் மீது தலிபான்கள் புகார்

அமெரிக்க இராணுவம் காபூலை விட்டுச் செல்லும்போது விமான நிலையத்தை பயன்படுத்த முடியாதபடி சேதமாக்கி விட்டதாகவும், 73 விமானங்கள் மற்றும் ஆயுதங்களை அழித்துவிட்டதாகவும் தலிபான்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

விரைவில் விமான நிலையத்தை திறக்கவும் சிவில் விமானப் போக்குவரத்தைத் தொடங்கவும் தாம் திட்டமிட்டுள்ளதாகவும், விமான நிலைய புனரமைப்புப் பணிகளுக்காக கட்டாரில் இருந்து நிபுணர்களை வரவழைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஆப்கான் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்காகவும்





மனிதாபிமான உதவிகளுக்காகவும் விரைவில் விமான நிலையம் திறக்கப்படும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா



## மரத்தில் தொங்கிய பசு

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஏற்பட்ட ஐடா புயலால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

மணிக்கு 240 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய காற்றின் காரணமாக கனமழையும், பெரு வெள்ளமும் ஏற்பட்டது. இதன் போது வெள்ளத்தில் சிக்கிய 60க்கும் மேற்பட்ட மாடுகள் மீட்கப்பட்டன.

இந்நிலையில் வெள்ளம் வடிந்து இரு நாட்களுக்குப் பின் புறநகரில் உள்ள வனப்பகுதியில் மரத்தில் தொங்கியபடி உயிருக்குப் போராடிய பசு ஒன்று பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியா

## துப்பாக்கி முனையில் 73 மாணவர்கள் கடத்தல்

வடமேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் கடந்த சில மாதங்களாக பணத்திற்காக பாடசாலைகளுக்குள் புகுந்து மாணவர்கள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அவ்வாறு கடத்தப்பட்ட மாணவர்களினது பெற்றோரிடம் இருந்து பெரும் தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டு மாணவர்களை கடத்தல்காரர்கள் விடுவித்து விடுவர் என்றும் அவ்வாறு பணம் கிடைக்காத சந்தர்ப்பங்களில் அவர்களைக் கொல்லும் நிகழ்வுகளும் இடம்பெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் நைஜீரியாவின் காயா என்ற பின்தங்கிய பிரதேசத்தில் பாடசாலை ஒன்றிலிருந்து 73 மாணவர்கள் துப்பாக்கி



முனையில் நேற்று முன்தினம் (1) கடத்தப்பட்டுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கன்றன.

மேலும் இம் மாணவர்களை மீட்க முயற்சிகள் நடந்து வருவதாகவும், கடந்த 9 மாதங்களில் மட்டும் ஆயிரம் மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாணவர்கள் கடத்தப்படுவதை தடுக்க முடியாததால் பல பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொலம்பியா



## புதிதாக அச்சுறுத்தும் 'மூ'

கொலம்பியாவில் புதிதாகக் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனாவுக்கு 'மூ' (MU) எனப் பெயரிட்டுள்ள உலக சுகாதார ஸ்தாபனம் கண்காணிக்க வேண்டிய கொரோனாவாக இதனைப் பட்டியலிட்டுள்ளது.

கடந்த ஒன்றரை வருடங்களாக அனைத்து நாடுகளுக்கும் பெரும் தலைவலியாக இருந்து வரும் கொரோனா தொடர்ந்து உருமாறிக் கொண்டே இருப்பதால், இதைச் சமாளிப்பது மிகவும் கடினமான பணியாக உள்ளது.

சீனாவில் கண்டறியப்பட்ட கொரோனா பின்னர் அல்பா ,டெல்டா திரிபுகளாக மாறியதைத் தொடர்ந்து தற்போது கொலம்பியாவிலும் புதிய உருமாற்றம் பெற்றுள்ளது.

வடகொரியா

## சீனாவுக்கு மறுப்பு தெரிவித்த வடகொரியா

உலகில் கொரோனாத் தொற்றுப் பரவல் ஆரம்பித்த காலத்தில் இருந்தே வடகொரியா கடுமையான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து வருகிறது. கடந்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயே அது தனது எல்லைகளை முற்றிலுமாக மூடிவிட்டது.

இந்நிலையில் ஏழை நாடுகளும் தடுப்பூசியை விரைவாகப் பெறும் திட்டத்தின் கீழ் சீனா 30 இலட்சம் சினோவாக் தடுப்பு மருந்துகளை வட கொரியாவுக்கு அனுப்பியிருந்தது.

எனினும், சீனா தங்களுக்கு வழங்கிய தடுப்பு மருந்துகளை வேறு நாட்டுக்கு திருப்பி



அனுப்பிவிடுமாறு வடகொரியா கேட்டுக் கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

வடகொரியா தடுப்பூசிகளை நிராகரிப்பது இது முதல் முறையல்ல. இதற்கு முன்னதாக கடந்த ஜூலை மாதம் 20 இலட்ச எண்ணிக்கையான அஸ்ட்ராசெனேகா தடுப்பு மருந்துகளைப் பெற வட கொரியா மறுத்தமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## 90 நாள்களுக்கு மேல் நீடித்த மாதவிடாய்

### யுவதிக்கு காத்திருந்த அதிர்ச்சி

லண்டனைச் சேர்ந்த யுவதி ஒருவருக்கு 90 நாள்களுக்கு மேல் மாதவிடாய் நீடித்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் வெளிவந்த தகவல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

*Bansri Dhokia* (30) என்ற யுவதிக்கே இவ்வாறு மாதவிடாய் நீடித்துள்ளது. அதன் காரணமாக சோர்வை உணர்ந்ததோடு, அடிக்கடி மூச்சுத்திணறலும் ஏற்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவர் *Bansri*, *lymphoblastic leukaemia* என்ற அரியவகை புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.



இந்நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தொடர் சிகிச்சை பெற்று வரும் அவர் இதுகுறித்துக் கூறுகையில், "ஆரம்பத்தில் ஏதோ என்னிடம் பிரச்சினை இருக்கும் என நினைத்தேன். ஆனால், இவ்வளவு பெரிய பிரச்சினையாக இருக்கும் எனக் கருதவில்லை.

என் வாழ்வை நினைத்து எனக்கு பயம் வந்துவிட்டது. எனக்கு ஏன் இப்படி ஆனது என என்னையே நொந்து கொண்டேன். சிகிச்சையை தொடர்ந்து எடுத்த நிலையில் நோயிலிருந்து மீண்டுள்ளேன்.

உங்கள் மாதவிடாயில் எதாவது பெரிய மாற்றம் நிகழ்ந்தாலோ அல்லது உடல்நிலையில் பிரச்சினை இருந்தாலோ அலட்சியப்படுத்தாதீர்கள் என கூறியுள்ளார்.

சர்வதேச போட்டிகளில்

# அதிக கோல்கள் அடித்து றொனால்டோ சாதனை

நட்சத்திர கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ, அதிக சர்வதேச கோல்கள் அடித்தவர்கள் பட்டியலில் முதல் இடம் பிடித்துள்ளார்

உலகக்கோப்பை கால்பந்து போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. கடைசியாக 2018 ஆம் ஆண்டு ரஷியாவில் நடந்த உலகக்கோப்பையில் பிரான்ஸ் சாம்பியன் பட்டம் பெற்றது.

2022 ஆம் ஆண்டுக்கான உலகக்கோப்பை கால்பந்து போட்டி ஆசிய கண்டத்தில் உள்ள கத்தாரில் நடைபெறவுள்ளது. இந்த போட்டி நவம்பர் 21 ஆம் திகதி முதல் டிசெம்பர் 18 ஆம் திகதி வரை நடக்கிறது.

இதில் 32 நாடுகள் பங்கேற்கின்றன. போட்டியை நடத்தும் கத்தார் மட்டும் நேரடியாக விளையாடும். மற்ற 31 நாடுகளும் தகுதி சுற்று மூலம் தேர்வுபெறும். உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்கான தகுதி சுற்று ஆட்டங்கள் உலகம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.

ஐரோப்பாவில் நடைபெற்று வந்த தகுதி சுற்று ஆட்டம் ஒன்றில் போர்ச்சுக்கல்-அயர்லாந்து அணிகள் மோதின.



சொந்த மண்ணில் நடந்த இந்த போட்டியில் போர்ச்சுக்கல் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் உலகின் முன்னணி வீரர்களில் ஒருவரான கிறிஸ்டியானோ றொனால்டோ 2 கோல்கள் அடித்து முத்திரை பதித்தார். அவர் 89 மற்றும் 96 ஆவது நிமிடங்களில் கோல் அடித்தார். இந்த 2 கோல்கள் மூலம் றொனால்டோ சர்வதேச போட்டிகளில் அதிக கோல் அடித்தவர் என்ற சாதனையை படைத்தார். 36 வயதான அவர் 180 ஆட்டங்களில் விளையாடி 111 கோல்கள் அடித்துள்ளார்.

ஈரானை சேர்ந்த அலிடாய் 149 ஆட்டங்களில் விளையாடி 109 கோல்கள் அடித்து முதல் இடத்தில் இருந்தார். அவரை ஏற்கெனவே சமன் செய்த றொனால்டோ தற்போது அவரை முந்தி அதிக கோல் அடித்த வீரர்களில் முதல் இடத்தை பிடித்தார்.

யுவென்டஸ் கிளப்பிலிருந்து மான்செஸ்டர் யுனைடெட்டுக்கு மீண்டும் றொனால்டோ சமீபத்தில்தான் மாறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசியாவை சேர்ந்த முக்தர் தகாரி 89 கோல்கள் அடித்து 3 ஆவது இடத்திலும், புஸ்காஸ் (ஹங்கேரி) 84 கோல்கள் அடித்து 4 ஆவது இடத்திலும், காட்பிரே (ஜாம்பியா) 79 கோல் அடித்து 5 ஆவது இடத்திலும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் டி–20 போட்டியில் நியூசிலாந்தை

## சுருட்டியது பங்களாதேஷ்

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டி-20 போட்டியை 7 விக்கெட்டுகள் 7 வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி வென்றுள்ளது.

பங்களாதேஷத்துக்கு சுற்றுப்பயணம் செய்து ஐந்து டி20 போட்டிகளில் விளையாடுகிறது நியூசிலாந்து அணி. முதல் டி-20 போட்டி டாக்காவில் நடைபெற்றது. டாஸ் வென்ற நியூசிலாந்து அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. முதல் ஓவரிலேயே அறிமுக வீரர் ரச்சின் ரவிந்திரா ஓட்டம் எதுவும் எழுக்காமல் ஆட்டமிழந்தார்.

முதல் ஆறு ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 18 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது நியூசிலாந்து. பிறகு 10 ஓவர்கள் வரை மேலும் விக்கெட்டுகளை இழக்காமல் 40 ஓட்டங்களை எடுத்தது. இதன்பிறகு வரிசையாக விக்கெட்டுகள் விழ ஆரம்பித்தன.

துடுப்பாட்டத்துக்கு மிகவும் சவாலாக அமைந்த ஆடுகளத்தில் நியூசிலாந்து அணி, 16.5 ஓவர்களில் 60 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. கேப்டன் டாம் லதம், ஹென்றி நிகோல்ஸ் ஆகியோர் அதிகபட்சமாக தலா 18 ஓட்டங்களை எடுத்தார்கள். முஸ்தாபிசுர் ரஹ்மான் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

கடந்த ஓகஸ்ட் 9 அன்று, ஆஸ்திரேலியாவை 62 ஓட்டங்களுக்குச் சுருட்டியது பங்களாதேஷ் அணி. அதேபோல நேற்று முன்தினம், நியூசிலாந்து அணியை 60 ஓட்டங்களுக்குள்



ஆட்டமிழக்கச் செய்துள்ளது. டி20 கிரிக்கெட்டில் நியூசிலாந்து அணி தனது குறைந்தபட்ச ஸ்கோரை சமன் செய்துள்ளது. இதற்கு முன்பு 2014 இல் இலங்கைக்கு எதிராக இதே 60 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தது.

பங்களாதேஷ் அணி முதல் 6 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 22 ஓட்டங்கள் எடுத்தது. 10 ஓவரின் முடிவில் 37/3 என்கிற நிலையில் இருந்தது. நியூசிலாந்தின் அஜாஸ் படேல் 4 ஓவர்களில் 1 விக்கெட்டுடன் 7 ஓட்டங்களை மட்டும் கொடுத்து சிறப்பாகப் பந்துவீசினார். இதன்பிறகு 15 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 62 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் முதல் டி20 ஆட்டத்தை பங்களாதேஷ் அணி வென்றது.

2 ஆவது டி-20...

முஷ்பிஃகுர் ரஹிம் 16, மஹ்முதுல்லா 14 ஓட்டங்களுடன் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்கள். டி-20 கிரிக்கெட்டில் நியூசிலாந்துக்கு எதிராக முதல் வெற்றியை பங்களாதேஷ் அணி பதிவு செய்துள்ளது. 2-ஆவது டி20 போட்டிய வெள்ளியன்று நடைபெறவுள்ளது.



## அஷ்வினுக்கு தினேஷ் ஆதரவு

லண்டன் ஓவல் மைதானத்தில் இங்கிலாந்துக்கு எதிரான 4 ஆவது டெஸ்டில் இந்திய அணியில் அஷ்வின் கண்டிப்பாக இடம் பெற வேண்டும் என்று இந்திய அணியின் வீரர் தினேஷ் கார்த்திக் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், இதுவரை 3 போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. இதில் 4 வேகப்பந்துவீச்சாளர்கள், ஒரு சுழற்பந்துவீச்சாளர் என்ற கூட்டணியில்தான் கோலி களமிறங்கியுள்ளார். இதில் ஜடேஜாவுக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அஷ்வினுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

ஓவல் மைதானம் தட்டையானது, சுழற்பந்துவீச்சுக்கு ஒத்துழைக்கும் என்பதால், அஷ்வின் போன்ற சிறந்த சுழற்பந்துவீச்சாளர்கள் அணியில் இருப்பது அவசியம் என்று பல்வேறு முன்னாள் வீரர்கள் வலியுறுத்தினர்.

இந்நிலையில் இந்திய அணியின் விக்கெட்கீப்பர் பேட்ஸ்மேன் தினேஷ் கார்த்திக்கும் அஷ்வினும், ஓவல் டெஸ்டில் இடம் பெற வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். லண்டனில் வெளியாகும் தி டெலிகிராப் நாளேட்டில் தினேஷ் கார்த்திக் கட்டுரையொன்றை எழுதியுள்ளார்.

இங்கிலாந்தில் உள்ள ஆடுகளங்களில் தட்டையானது ஓவல் மைதானம்; இந்த சீசனுக்கும் எந்த மாற்றமும் இருக்காது. இதற்கு முன் நடந்த கவுன்டி போட்டிகளில் சர்ரே அணி மோதிய 3 ஆட்டங்கள் முடிவில்லாமல் இருந்தாலும், அதில் 10 சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன. ஆதலால், பேட்டிங்கிற்கும், சுழற்பந்துவீச்சுக்கும் இந்த மைதானம் நன்கு ஒத்துழைக்கும்.

டெஸ்ட் ரேங்கிங்:

## முதலிடத்தில் ரூட்



சர்வதேச கிரிக்கெட் பேரவையின் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் இங்கிலாந்து அணியின் கேப்டன் ஜோ ரூட் ஏறக்குறைய 6 ஆண்டுகளுக்குப் பின் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இந்திய அணிக்கு எதிராகத் தொடர்ந்து 3 சதங்களை ரூட் அடித்ததன் மூலம் தரவரிசையில் இந்த உயர்வை ரூட் பெற்றுள்ளார்.

இந்திய அணிக்கு எதிராக டெஸ்ட் தொடர் தொடங்கும்போது தரவரிசையில் 5 ஆவது இடத்தில் இருந்த ரூட், 3 டெஸ்ட் போட்டிகளில் 3 சதங்கள் உள்பட 507 ஓட்டங்களை சேர்த்து, கோலி, லாபுஷேன், ஸ்டீவ் ஸ்மித், கேன் வில்லியம்ஸன் ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளி முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

தற்போது 916 புள்ளிகளுடன் ரூட் முதலிடத்தைப் பிடித்துள்ளார். இதற்கு முன் கடந்த 2015 ஆம் ஆண்டு டிசம்பரில் முதலிடத்தைப் பிடித்திருந்த ரூட் 6 ஆண்டுகளுக்குப் பின் இப்போது மீண்டும் முதலிடத்துக்கு வந்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு அதிகபட்சமாக 917 புள்ளிகளை ரூட் பெற்றிருந்தார். அதைவிட ஒரு புள்ளி குறைவாக தற்போது ரூட் பெற்றுள்ளார். இதற்கு முன் இங்கிலாந்து வீரர்கள் லென் ஹட்டன், ஜேக் ஹாப்ஸ், பீட்டர் மே, டெனிஸ் காம்டன் ஆகியோர் மட்டுமே அதிகமான ரேட்டிங் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். தற்போது ரூட் பெற்றுள்ளார்.

இங்கிலாந்து பேட்ஸ்மேன் ரோரி பர்ன்ஸ் 5 இடங்கள் நகர்ந்து 24 ஆவது இடத்துக்கும், பேர்ஸ்டோ 2 இடங்கள் நகர்ந்து 70ஆவது இடத்துக்கும் முன்னேறியுள்ளனர். டேவிட் மலான் 3 ஆண்டுகளுக்குப் பின் டெஸ்ட் போட்டியில் இடம் பெற்று 88 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 03 செப்டெம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.